விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 27 செவ்வாய்க்கிழமை (10.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஆதாரங்கள் இல்லாமல் விசாரணை செய்ய முடியாது

## விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு

(மட்டக்களப்பு) காணாமல் போனவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஆதாரங்கள் தேவை என காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## சொல்ஹெய்ம் மீது அரசு பாய்ச்சல்

(கொழும்பு)

நோர்வேயின் முன்னாள் சர்வதேச விவகார அமைச்சரும், இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்மின் சாட்சியம் நகைப்பிற்குரியது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் எந்தவொரு சர்வதேச நீதிமன்றிலும் சாட்சியமளிக்கத் தயார் என சொல்ஹெய்ம் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் சொல்ஹெய்மின் இந்தக் கருத்து நகைப்பிற்குரியது எனவும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியமளிக்கும் தகுதி கிடையாது எனவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சொல்ஹெய்ம் இலங்கை விவகாரங்களில் எந்த வகையிலும் பங்கேற்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க....

## பொங்கல் விழாவுக்குச் சென்ற இளைஞர்கள் இருவர் விபத்தில் பலி

### டிப்பர் மோதியதால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் திருவிழாவிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மதியம் 12.45 மணியளவில் பரந்தன் புகையிரத நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்துச் சம்பவத்தில் கோப்பாய் இராசவீதியைச் சேர்ந்தவர்களான உதயராசா விதுஷன் (வயது 21), சிவானந்தராசா ஜேம்ஸ் நெல்சன் (வயது 25) ஆகிய இருவருமே உயிரிழந்தவராவர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, பரந்தன் புகையிரத நிலையத்திற்கு முன்பாக சென்று கொண்டிருந்தபோது இவர்களுக்கு பின்னால் வந்த டிப்பர் வாகனம் இவர்களை மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து முன்னால் வந்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது பிரஸ்தாப இளைஞர்கள் நிலத்தில் வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்

19 ஆம் பக்கம் பார்க்க....

## 32 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களிற்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் விளக்கமறியல் விதித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு 8 படகுகளில் வந்த 32 இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால்

19 ஆம் பக்கம் பார்க்க....

## கருத்துக் கேட்க அரசு திட்டம்

(கொழும்பு)

போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் நாடாளுமன்றில் கருத்து கோரப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனிதாபிமான மீட்புப் பணிகளின் போது போர்க் குற்றச் செயல்கள் இடம் பெற்றதாகத் தெரிவித்து, ஐக்கிய நாடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.விசாரணைக் குழுவின் விபரம் இலங்கைக்கு முறைப்படி அறிவிப்பு

### இன்று 26 ஆவது கூட்டத் தொடர்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐ.நா. விசாரணைக் குழு குறித்த விபரங்களை அரசாங்கத்துக்கு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முறைப்படி அறிவித்துள்ளார்.

இவ்விசாரணைக் குழு தொடர்பிலான முழு விபரங்கள் அடங்கிய கடிதம் ஒன்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதிக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 26-வது கூட்டத்தொடரில் இந்த விசாரணைக் குழு தொடர்பிலான முழுமையான விபரத்தை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்

19 ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய மீனவர்கள் 78 பேரை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற கூட்டுக் குழு கூட்டம் கூடியுள்ளதை முன்னிட்டு இலங்கையின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டுவிட்டர் மூல மாகத் தெரிவித்திருக்கின்றார்.

இந்திய அரசாங்கத்தினால் 13 இலங்கை மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டிருப்பதை வரவேற்றுள்ள அவர் இந்திய பாதுகாப்பில் உள்ள ஏனைய இலங்கை மீனவர்

19 ஆம் பக்கம் பார்க்க....

## வியட்நாம் தூதுவர் முதலமைச்சருடன் பேச்சு



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நீர்வாழ் உயிரினங்களினை வளர்த்தெடுக்கும் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான இடம் வட மாகாணமாகும்.

இத்தொழில் நுட்பப் பயிற்சி முறைகளின் வெற்றிக்கு வித்திடுவதற்கு வியட்நாம் அரசு தொடர்ந்தும் உதவிகளினை வழங்கும் என யாழ். வந்த வியட்நாம் தூதுவர், வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் வியட்நாமின் தூதுவர் டோன் சின் தாங் முதலமைச்சர் வாசஸ்தலத்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலம்புரிச் சங்கை விற்க முயன்ற மூவர் பொலிஸாரால் கைது

## மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

55 இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த வலம்புரிச் சங்கினை விற்பனை செய்ய முயன்ற மூவர் யாழ்.விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மானிப்பாய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நவாலி வடக்கு, உடுவில் மல்வம், ஆனைக்கோட்டை காக்கைதீவு ஆகிய 3 இடங்களினைச் சேர்ந்த மூவர் மானிப்பாயிலுள்ள தனியார் வங்கியொன்றினூடாக குறித்த வலம்புரிச் சங்கினை 55 இலட்சம் ரூபாவிற்கு பேரம் பேசி விற்க முயன்றுள்ளனர்.

இவ்வலம்புரிச் சங்கு விற்பனை தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி பொலிஸார் யாழ். விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டி.ஏ.ரொஹான் மகேஷின் பணிப்புக்கமைய விசேட நடவடிக்கையினை மேற்கொண்ட அதிரடிப் படையினர் மானிப்பாயிலுள்ள தனியார் வங்கியொன்றினூடாக சங்கு விற்பனையாக இருப்பதனை அறிந்து கொண்டனர்.



இதனையடுத்து குறித்த வங்கினை முற்றுகையிட்ட விசேட அதிரடிப் படையினர் சங்கு விற்பனையில் ஈடுபட்டிருந்த மூவரினையும் கைது செய்ததோடு சங்கினையும் மீட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இதில் கைப்பற்றப்பட்ட வலம்புரிச் சங்கு 55 இலட்சம் ரூபாவிற்கு விற்பனையாக இருந்தது எனவும், நவாலி வடக்கினைச் சேர்ந்த செல்வராஜா புஸ்பராஜா, உடுவில் மல்வத்தினைச் சேர்ந்த மாணிக்கவாசகர் செந்தில்குமரன், ஆனைக்கோட்டை காக்கைதீவினைச் சேர்ந்த வரதலிங்கம் சிவஞானம் ஆகியோரே கைது செய்யப்பட்டதாகவும் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகேஷ் தெரிவித்தார். (எ-4)

# சட்டத்தரணியை தூற்றிய தேரர்

(கொழும்பு)

பொது பல சேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர், தம்மை நாய் என்று தூற்றியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன நேற்று முறையிட்டுள்ளார்.

ஞானசார தேரரினால் கொம்பனி வீதியில வைத்து கடந்த மாதம் பயமுறுத்தப்பட்ட வட்டகரக்கே விஜித தேரர் தாக்கல் செய்துள்ள மனுவில் வட்டரக்கேவுக்கு ஆதரவாக சட்டத்தரணியான மைத்திரி குணரட்ன ஆஜராகினார்

இந்தநிலையில் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் வைத்து நேற்றுக் காலை ஞானசார தேரர் தம்மை தூற்றியதாக குணரட்ன குறிப்பிட்டுள்ளார். (எ-11)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com



**தவறவிடப்பட்டுள்ளது**

பூநகரியைச் சேர்ந்த பஞ்சாச்சரம் டினேஸ் என்பவருடைய 911682796V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் இன்சூரன்ஸ் போன்ற ஆவணங்கள் அடங்கிய பேஸ் யாழ்ப்பாணத்துக்கும் கல்வியங்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : 0770321616
நெற்புலவு, பூநகரி.
(C-7608)



**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7606)



**விற்பனைக்கு**

பெரிய விளானில் கல் உடைக்கும் ஆலை விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :
0773253610
(C-7607)



**விற்பனைக்கு**

கோட்ஸ் வீதி, நீலியம்பனை மல்லாகம் எனும் இடத்தில் 2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :
0776685459
(6722)



**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம்**

**க.பொ.த (உ/த) பிரிவு 2016 அனுமதிக்கான விண்ணப்பம்**

எமது பாடசாலையில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் சேர்ந்து கல்வி கற்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தை கல்லூரி அலுவலகத்தில் பெற்று 23.06.2014க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

✦ தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு பாதுகாப்புடன் கூடிய போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

பாடசாலை நிர்வாகம்
(சி-7611)


## "நானும் எனது அமைச்சும் செய்யவேண்டிய பணிகளில் அரைவாசிக்கு மேற்பட்ட பணிகளை தனது சொந்த நிதி அனுசரணையுடன் செய்து பெருவெற்றியையும் பெற்றுள்ளார் இந்துபௌத்த கலாசாரப் பேரவையின் செயலாளர்"





இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் தேசிய இரண்டாம் மொழிக்கற்கை நிலையத்தின் ஆறாவது சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் கௌரவ வாசுதேவ நாணயக்காரா இவ்வாறு குறிப்பிட்டார். கடந்த 26.05.2014 இல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் தலைவர் வணக்கத்திற்குரிய அத்துறலிய ரத்தன தேரர் தலைமையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் 600 க்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இக் கற்கைநெறிக்கான நிதி அனுசரணையை இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் செயலாளர் தேசமானிய எம்.ரீ.எஸ்.இராமச்சந்திரன் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார். (6724)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 - 02 - 1947

ஆண்டவன் அடியில் 02 - 06 - 2012



## அமரர் விவேகானந்தன் கமலரேகா

திதி :- திரியோதசி (10.06.2014)

அம்மா உன்னை பிரிந்து
ஆண்டிரண்டு ஆனதுவோ!
எம் விழிகள் நிரந்தரமாய்
ஈரமாய் ஆனதுவோ!

இருக்கும் வரை எம்மைப் பற்றியே
எப்போதும் யோசித்தாய்
உன் துன்பமெல்லாம் பொறுத்து
எம் உயர்வை பிரார்த்தித்தாய்

அதிகாலையில் எழுந்தவுடன்
அம்மாவே உன் நினைப்பு
ஆகாரம் உண்கையில்
அன்னையே உன் நினைவு
நித்திரைக்கு போகும் வரை
நித்தம் உன் நினைவு

எப்போதும் எங்கேயும்
நீ எம்மோடு இருந்திடனும்
எவ் வகையிலாவது அம்மா - நீ
எம்மோடு இணைந்துவிடு - நீ
இல்லாத எம் தவிப்பு
இல்லாமல் போகட்டும்

அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்

**உங்கள் நினைவுகளோடு...**

சசி, நிரஞ்சா, முகுந்தன்
மற்றும் உறவினர்கள்.

அருந்தியார் வளவு,
திக்கம்.
(C-7616)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு மோடியால் மட்டுமே தீர்வுகாண முடியும்

## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

**தமிழக மீனவர்கள் கைதுக்கு தீர்வுகாண இலங்கையை மத்தியஅரசு எச்சரிக்க வேண்டும் என்று பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கை கடற்படையினரின் அட்டூழியம் இடைவிடாமல் தொடர்கிறது. கடந்த 7 ஆம் திகதி வங்கக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 82 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 18 விசைப்படகுகளையும் இவர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

வங்கக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் படும் துயரங்கள் சொல்லிமாளாது. கடந்த 30 ஆண்டுகளில் சுமார் 600 மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் ஆயிரக்கணக்கானோர் தாக்கப்பட்டுள்ளனர் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் அதற்கு காரணமான இலங்கைக் கடற்படையினர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதனால் தான் தமிழக மீனவர்களுக்கு எவ்வளவு தீமை செய்தாலும் கேட்பதற்கு ஆளில்லை என்ற துணிச்சலில் இலங்கை கடற்படையினர் தங்களின் அட்டகாசங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாகவே இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, எந்த தவறும் செய்யாத தமிழக மீனவர்கள் 82 பேரை ஒரே இரவில் இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துச் சென்றிருக்கின்றனர்.

இந்தியாவிலேயே அயல்நாடுகளால் மீனவர்கள் கைது செய்யப்படும் கொடுமையை அனுபவித்து வரும் மாநிலங்கள் தமிழ்நாடும், குஜராத்தும் தான். குஜராத் மீனவர்கள் பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்படுவதால் அந்த மீனவர்களின் குடும்பத்தினர் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்பதை அம்மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையில் தாம் அறிந்திருப்பதாகவும், அதேபோல் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் படும் துயரத்தை அறிய முடிவதாகவும், மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்படும் என்றும் தமிழகத்தில் பரப்புரைக் கூட்டங்களில் பேசும்போது நரேந்திர மோடி வாக்குறுதி அளித்திருந்தார். இதனால் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் இலங்கைக் கடற்படையினரின் கொட்டம் அடக்கப்படும் என்று மீனவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால், ஒருபுறம் இந்தியாவுடன் நல்லுறவை பேணுவதைப் போல நாடகமாடும் இலங்கை அரசு, இன்னொரு புறம் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டு வருகிறது.

மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து கடந்த 10 நாட்களில் 4 முறை மட்டுமே தமிழக மீனவர்கள் வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இதில் இரு முறை தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் 3 முறை தாக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்வதைப் போல இலங்கை அரசு நாடகமாடினாலும், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து வைத்துக் கொண்டு திரும்பித்தர மறுப்பதால், மீனவர்களின் வாழ் வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்கள் தற்போது நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசைத் தான் மலைபோல நம்பியிருக்கிறார்கள். இலங்கை அரசைக் கடுமையாக எச்சரிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் மட்டுமே முடியும் என்பது தமிழகத்தின் நம்பிக்கை ஆகும்.

எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 82 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் உடனடியாக விடுவிக்கும்படி இலங்கை அரசுக்கு மத்திய அரசு அழுத்தம் தர வேண்டும். அதுமட்டுமின்றி, மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (2)

# இந்திய மீனவர்கள் 46 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பினுள் 9 படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் 46 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

மேலும், மேற்படி 46 மீனவர்களில் அடங்குகின்ற 15 வயதுடைய சிறுவன் ஒருவனை சிறுவர் பிரிவில் வைக்குமாறும் நோய்வாய்ப்பட்டுள்ள மீனவர் ஒருவருக்கு உடனடியாக சிகிச்சை வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

மேற்படி கடற்பரப்பில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் 46 இந்திய மீனவர்களை கைதுசெய்த கடற்படையினர், இவர்களை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இம்மீனவர்களின் 9 படகுகளையும் வலைகளையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார். (2)




ஒரு நாள் மாபெரும் சரும பராமரிப்பு பயிற்சி பட்டறை!

இவ்வுலகில் அழகை விரும்பாதவர் எவரும் இல்லை.
ஆனால் எமது அழகை இயற்கையான முறையில்
பேணிப்பராமரிப்பது எவ்வாறு என்று தெரியாமல் கவலைப்படுகின்றோம்.

இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

சருமம் பற்றிய விளக்கம்
சருமத்தின் வகைகள்
சருமத்தை கண்டுபிடிக்கும் முறைகள்
சருமத்தை பராமரிக்கும் முறைகள்
facial செயன்முறை பயிற்சி
போன்ற தெளிவான விளக்கத்துடன்
ஒரு நாள் சரும பராமரிப்பு பயிற்சி பட்டறை
நடைபெற உள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்
ஆசிரியர்கள் வங்கியில் தொழில் புரிபவர்களுக்கு
மிகவும் பயனுள்ளதாக இருக்கும்

திகதி : 12.06.14 வியாழக்கிழமை
(போயா விடுமுறை)
நேரம் : காலை 10.30 மணி
இடம் : 187/30 யூ னியன் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

பயிற்சிக் கட்டணம் : ரூபா 750 மட்டுமே
இருவர் இணைந்து வந்தால் ரூபா 500.

தொடர்பு : 077-771 2604

ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டதால்
உங்கள் விபரங்களை மேற்கூறிய தொலைபேசி இலக்கத்திற்கு
SMS அனுப்பி முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.

C-7579


# இராசி பலன்

**10.06.2014**
**(வைகாசி 27, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு**
**துவாதசி பிற்பகல் 2.00 மணிவரை**
**சுவாதி பிற்பகல் 3.25 மணிவரை**
**இராகுகாலம் 2.52-4.22மணிவரை**
**சுபநேரம் 10.23-11.53மணிவரை**
**பிரதோச விரதம்**

வளவன்

**மேடம்:** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** கனவுகள் நனவாகக் கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும்,பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும், சுப செய்திகள் இல்லம் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், தொழில் நன்மை கருதிய பயணமொன்று ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், அந்நிய தேசத் தொடர்புகள் நன்மை தரும், செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும். திருடர் பயமுண்டு.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடாவில் கந்தசுவாமி கோவில் வீதி திருத்துவது எப்போது?

வடமராட்சி கெருடாவில் கந்தசுவாமி கோவில் வீதி நீண்டகாலமாக குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப் பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதி உடுப்பிட்டி தொண்டைமானாறு ஊரிக்காடு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களை இணைக்கும் பிரதான வீதியாக காணப்படுகின்றது.

குறித்த வீதியால் தினமும் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள், விவசாயிகள் வேலைக்கு செல்வோர் என பல தரப்பினர் பயணித்து வருகின்றனர்.

ஆனால், இவ் வீதியூடாக சீரான பயணத்தை தம்மால் மேற்கொள்ள முடியவில்லை என் அம் மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக வடமராட்சி வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு மக்களால் கோரிக்கை விடப்பட்டது.


ஆனால் இதுவரைக்கும் எந்தவொரு திருத்த வேலைகளும் இடம்பெறவில்லை.

இவ் வீதியானது நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறான வீதியாகவே காணப்படுகின்றது.

அத்துடன் மழை காலங்களில் குறித்த வீதியில் மழை நீர் வழிந்தோடாமல் தேங்கி நிற்பதால் அப்பாதையூடாக பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

எனவே குறித்தவீதியை மக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் செப்பனிட்டுத் தருமாறு வடமராட்சி வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அப் பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-10)

நன்றி-மிரர்




# தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2010/ 2012, 2011/2013 கல்வி ஆண்டுகளில் கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெறுமென யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மேற்படி ஆண்டுகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து கற்பித்தலில் தேசிய தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கு விண்ணப்பப்படிவம் தபால் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இப்படிவத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலும் விலாச மாற்றம் காரணமாக கடிதம் கிடைக்காதவர்கள் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# சமாதான நீதவான் நியமனம்



புங்கன்குளம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கணேஸ்வரி ஜெயசீலன் அண்மையில் நீதிமறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப்பட்டதாரியும் தற்சமயம் யாழ். மாவட்ட செயலகத்தில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (2)

# இராணுவத்தினரால் துப்புரவு பணி

(யாழ்ப்பாணம்)

உலக சுற்று சூழல் தினத்தினை அனுஷ்டிக்கும் விதமாக யாழில். இராணுவத்தினரால் மாவட்டத்திலுள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை இல்லாதொழித்தல் எனும் தொனிப்பொருளில் கழிவகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந் நடவடிக்கையில் ஒவ்வொரு இராணுவ முகாம்களையும் சேர்ந்த இராணுவத்தினர் ஈடுபடுவதுடன், கழிவுகளை வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

உலக சுற்றுச் சூழல் தினத்தினை அனுஷ்டிக்கும் முகமாக இராணுவத்தினரால் விழிப்புணர்வு வாகனப் பேரணி ஒன்று கடந்த 5 ஆம் திகதி நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து கழிவகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# மருதங்கேணி வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் பற்றாக்குறை

## நோயாளர்கள் சிகிச்சைக்கு காத்திருப்பு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை யில் நிரந்தர வைத்தியர் பற்றாக்குறை நிலவி வருவதாக அப்பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் நிரந்தர கடமையில் வைத்தியர் ஒருவர் மட்டும் பணியாற்றி வருகிறார்.

இதேவேளை குறித்த வைத்தியர் விடுமுறை நாட்களில் வைத்தியசாலைக்கு வருகை தராத பட்சத்தில் வடமராட்சி முள்ளியான் பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர், பகுதிநேர வைத்தியராக கடமைக்கு குறித்த வைத்தியசாலைக்கு சமுகமளிக்கிறார்.

இருப்பினும் குறித்த வைத்தியர் பகுதி நேரமாக மட்டும் கடமையாற்றி வருவதால் அப்பிரதேச நோயாளர்கள் வைத்தியரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

சில வேளைகளில் குறித்த வைத்தியரும் வருகை தராவிடின் அன்றைய தினம் எந்தவித வைத்திய சிகிச்சைகளும் நடைபெறுவதில்லை. இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என பல தரப்பினர் சிகிச்சை பெற்றுக் கொள்வதில் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இப்பிரதேச மக்கள் குறித்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அல்லது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் சிறு காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த வைத்திய சாலைக்கு நிரந்தர பதில் வைத்தியர் நியமிக்கப்பட வேண்டும் என அப் பிரதேச வாசிகள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-64)




# பொதுச் சபை உறுப்பினர் தெரிவு

(கரணவாய்)

கரணவாய் தெற்கு முதலைக்குளி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரின் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது பொதுச் சபை உறுப்பினர்களாக 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆலய சபையினர் அறிவித்துள்ளனர்.

இதன்பிரகாரம் தலைவராக சிவநாதனும் உப தலைவராக க.உலகநாதனும் செயலாளராக வீ.தர்மகுலசிங்கம், உப செயலாளராக சு.மகாகணபதி, பொருளாளராக சி.புஸ்பாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-60)

# மினிபஸ் மீது கல்வீச்சு தாக்குதல்

யாழ். மல்லாகத்தில் ஒழுங்கையொன்றில் நிறுத்தி வைக்கப்பட்ட தனியார் மினி பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நேற்று முந்தியம் இரவு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொண்ட நிலையில், அப்பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்ததாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மாவிட்டபுரம் வழித்தட சேவையில் ஈடுபடும் மேற்படி மினி பஸ்ஸின் மீதே கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட பிரச்சினையே இக் கல்வீச்சுக்கு காரணமென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-6)

# குறைகேள் அரங்கு

## ஆலயங்களில் அடிதடி என்றால்...

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது நம் முன்னோர் வாக்கு.

ஊர் கூடித் தேர் இழுத்தல் என்பதன் உயர்ந்த பொருள் ஊர் ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும்.

எனவே ஆலயங்களின் அடிப்படைத் தோற்றம்; ஒற்றுமை, ஆன்மிக பலம், தெய்வீகம், அமைதி, சாந்தம் என்ற நற்குணங்களை எம்மிடத்தே ஏற்படுத்துவதாகும். இந்த உயரிய நோக்கங்களுடன் அமைக்கப்பட்ட ஆலயங்கள் இன்று பல்வேறு சிக்கல்களைத் தனதாக்கிக் கொண்டு நீதிமன்றங்களை நாடி நிற்கின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஆலயங்களை நீதிமன்றங்களுக்கு இழுத்துச்செல்கின்றநிலைமை தெய்வீகத்தை உணராததாலும் நான் என்ற ஆணவத்தாலும் ஏற்படுவதாகும்.

எனவே முதலில் ஆலயத்தின் தத்துவத்தை நாம் உணரப்பெற வேண்டும்.

ஆலயங்களை இடித்து புதிதாகக் கட்டுதல் - வானுயர்ந்த கோபுரங்களை நிர்மாணித்தல் என்பன எழுச்சி கொண்டிருந்தாலும் மற்றவர்களை மதிக்கின்ற மகத்துவம் தாழ்நிலையிலேயே உள்ளது என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அண்மையில், பிரபல்யமான காளி கோவில் ஒன்றில் நடந்த அன்னதானத்தின் போது ஒருவர் இன்னொருவரைத் தாக்கிய சம்பவம் நடைபெற்றமை எங்கள் ஆலயங்களின் போக்கு எத்தன்மையில் உள்ளது என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

அன்னதானம் என்பது அனைவரும் ஒன்றாக அமர்ந்து போசனம் உண்டு, ஆண்டவனின் சந்நிதியில் நாம் அனைவரும் சமம் என்ற சிந்தனையை எங்கள் உணர்வுகளுக்குள் ஏற்படுத்துவதாகும்.

ஆனால் ஆலயத்தில் - அன்னதானத்தில் அடிதடி என்றால்; ஆலயத்தின், அன்னதானத்தின் மகத்துவம் செயலிழந்து போகும்.

எனவே இத்தகைய விரும்பத்தகாத விடயங்கள் நடைபெறாமல் இருப்பதை ஆலய நிர்வாகங்களும், அந்தணச் சிவாச்சாரியர்களும் கவனிக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

-காளிதாசன்



யாழ்.பல்கலைக்கழக மனைப் பொருளியல் துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பி.சிவநாதன் நாடாவினை வெட்டி கண்காட்சியை திறந்து வைப்பதையும் [illegible] யிடுவதையும் படங்களில் காணலாம். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் வாக்குரிமையை இழந்து விடக்கூடாது-அரியநேத்திரன்

ஈழத் தமிழர்களுக்கு இன்றைய நிலையில் இருக்கக் கூடிய உரிமை வாக்குரிமை மட்டுமேயாகும். எனவே அதனை நாங்களாகவே இழந்து விடக் கூடாது. இதனை கவனத்திற் கொண்டு வாக்காளர் இடாப்புக்களை திருத்துவதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை ஒவ்வொரு குடும்பத்தினரும் பூர்த்தி செய்து தவறாமல் ஒப்படைத்தல் வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வகையில் திட்டமிட்ட முறையில் அரசாங்கத்தினால் தமிழரின் பாரம்பரியப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்து மீறிய குடியேற்றம் நில அபகரிப்பு என்பனவும் தமிழர்களின் விகிதாசாரத்தை வீழ்ச்சியடையச் செய்கின்றன. அதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதை யாரும் மறுப்பதற்கில்லை.

தேர்தலின் போது கூட நம்மவர்கள் தமது வாக்குரிமையை முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. சுமார் 70 வீதத்தினருக்கு மேல் வாக்களிப்பதில்லை. நூறு வீதமும் வாக்களிக்கப்பட்டிருக்குமேயானால் மேலும் தமிழர்கள் பலரை பாராளுமன்றத்துக்கும் மாகாண சபைகளுக்கும் உறுப்பினர்களாக தெரிவு செய்திருக்க முடியும்.

இவ்வாறான நிலையில் வாக்காளர் இடாப்புகளையும் நாம் சரியான முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காவிடின் நமது வாக்குரிமையையும் நாமே பறி கொடுத்தவர்களாவோம். எனவே வாக்காளர் இடாப்புகளை திருத்துவதற்குரிய படிவங்கள் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் நிரப்பி தவறாமல் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார். (2)

# வாயிலில் கறுப்புத்துணி கட்டி இரா. மீனவர்கள் போராட்டம் நாளை முன்னெடுப்பு

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி நாளைய தினம் புதன்கிழமை வாயிலில் கறுப்புத் துணி கட்டி போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இராமேஸ்வர மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்ற மீனவர்களையும், படகுகளை, மீட்டுத் தர வேண்டும் என இராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் செய்துள்ளனர். சென்னை கடற்பகுதியில் எல்லை தாண்டி வந்த 12 இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவல் படையினர் படகுகளுடன் கடந்த 2 நாட்களுக்கு முன்னர் கைது செய்தனர். இதற்கு பதில் நடவடிக்கையாகவே இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களை சிறைபிடித்து வருவதாக இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இராமேஸ்வரம் மீன்வளத்துறை அலுவலகம் முன்பு மீனவ பிரதிநிதிகளின் அவசர கூட்டம் நடந்தது. இதில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மீனவர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் நாளை புதன்கிழமை வாயிலில் கறுப்பு துணி கட்டி போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபடுவது என்றும் மீனவர்கள் அறிவித்துள்ளனர். (2)


## மகாதேவ ஆச்சிரமம்
## MAHADEVA ASHRAMAM

**Regd No: svp 104/44 Of 29.10.1976 024 3243443**

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரம பொதுக்கூட்டம் 07.06.2014 இல் ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. குரு பீடாதிபதி விருப்பத்திற்கு அமைவாக நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

| | |
|---|---|
| தலைவர்:- | ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் |
| உப தலைவர்:- | திரு. ஆ.சிவநாதன் |
| செயலாளர்:- | திரு.கு.நித்தியானந்தன் |
| உப செயலாளர்:- | திரு.கு.நித்தியானந்தன் |
| பொருளாளர்:- | திரு.சு.சுகந்தன். |
| நிர்வாக உறுப்பினர்கள்:- | திரு. அ.நாகேந்திரன் |
| | திரு. செ. செல்வரெட்ணம் |
| | திரு.சி.சிவமோகன் |
| | திரு. வி.கிருபாகரன் |
| | திரு. அ.விஜயகுமார் |
| | திரு.பிரதீஸ்வரன் |
| | திரு. மு.கனகரத்தினம் |
| | திரு.த.பேரம்பலம் |
| | திரு.ச.ஸ்ரீமுருகன் |
| | திரு.திரவியச்செல்வம் |

கணக்காய்வாளர்:-ஸ்ரீ திலகரட்ணம் அன்கோ (கொழும்பு) அன்பே சிவம்

**ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்**
**குருபீடாதிபதி**

(6709)


# சரத் பொன்சேகாவை மக்கள் ஜெனரலாகவே கருதுகின்றனர்

## பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொட

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவை மக்களும் கட்சி உறுப்பினர்களும் தொடர்ந்தும் இராணுவ ஜெனரலாகவே கருதுகின்றனர் என கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார். இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு சரத் பொன்சேகாவின் பதவிகளும் பதக்கங்களும் பறிக்கப்பட்டதுடன் ஓய்வூதியக் கொடுப்பனவும் இரத்து செய்யப்பட்டது. எனினும், பொதுமக்கள் தொடர்ந்தும் சரத் பொன்சேகாவை இராணுவ ஜெனரலாகவே கருதுகின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் இராணுவ பதவிகள் குறித்து குறிப்பிடுவது சட்ட விரோதமானது என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக யாரைத் தெரிவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)


இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் க்ரீன் மூலம் மேற்கொண்டு

தேவையற்ற முறையில் எரிபொருளுக்காக செலவழிக்கின்ற பெருமளவு பணத்தினை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்

இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் க்ரீன் மூலம் செய்து எரிபொருள் செயல்திறன் பற்றி அறிந்து கொள்ளுங்கள். பணத்தினை சேமிக்க ஆரம்பியுங்கள்.

வாகனத்தின் எரிபொருள் செயல்திறன் பற்றிய தரவுகளை ட்ரய்வ் க்ரீன் புகை பரிசோதனையொன்றின் மூலமே உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்களும் இன்றே ட்ரய்வ் க்ரீன் இற்கு சென்று உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை மேற்கொண்டு அதன் மூலம் பெறுகின்ற தரவுகளை பயன்படுத்தி உங்கள் வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைப்படி செய்து எரிபொருள் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளுங்கள். பண விரயத்தினை குறைத்துக் கொள்ளுங்கள்.

**இத்தரவுகள் ட்ரய்வ் க்ரீன் இடமிருந்து இலவசம்**

எரிபொருள் விரயம் பற்றிய தரவுகள்

பராமரிப்புக்கான எளிய வழிகாட்டல்கள்



drivegreen
so we can all breathe easier

நாடு முழுவதும் உள்ள ட்ரய்வ் க்ரீன் கிளைகளுக்கு சமூகமளியுங்கள். அல்லது உங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள ட்ரய்வ் க்ரீன் நிலையத்தின் தகவல்களை பெற தொடர்புகொள்ளுங்கள்.

**உடனடி அழைப்புக்கு: 0117 444 444**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பெற்றோல் வாகனங்களுக்காக மட்டுமே.

(வி-7610)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் ஒன்று மாணவர்கள் அடுத்தாண்டு பாடசாலையில் இணைக்கப்படவுள்ளனர்

## விண்ணப்பங்கள் ஜூலை 4 இற்குள் அனுப்பலாம்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டிற்கு அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கிணாங்க தமது பிள்ளைகளை முதலாம் தரத்திற்கு சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது பாதுகாவல்ர்கள் அதற்கான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளுக்கு ஜூலை 8ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்யுமாறும் கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கல்வியமைச்சு இது தொடர்பில் விண்ணப்பமொன்றை வெளியிட்டுள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் அதுபோன்ற மாதிரி விண்ணப்பமொன்றைத் தயார் செய்து கேட்கப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கி அதனை பூர்த்திசெய்து தாம் எதிர்பார்க்கும் பாடசாலை அதிபர்களுககு ஜூலை 4ஆம் திகதிக்குள் கிடைக்கச் செய்யுமாறு கோரியுள்ளது.

பாடசாலைக்கு முதலாம் தரத்தில் சேர்க்கப்படவுள்ள மாணவனின் வயது 2015 ஜனவரி 31ஆம் திகதியன்று ஐந்து வயதைப் பூர்த்தி செய்திருப்பது அவசியம்.


இதனை உறுதிப்படுத்துவதற்கு பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். முதலாம் தரத்திற்கு ஒரு வகுப்பிற்கென 40 பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரர்கள் தேசிய பாடசாலையொன்றிற்கு விண்ணப்பிக்கும்போது குறைந்த பட்சம் 3 மாகாண பாடசாலைகள் உட்பட 6 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பத்துடன் சுய விலாசமிடப்பட்ட பதிவுத் தபால் முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றையும் பதிவுத் தபால் மூலம் உரிய பாடசாலை அதிபருக்கு அனுப்ப முடியும்.

பெற்றோர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் அது தொடர்பான விபரங்களை வழங்க வேண்டியது அவசியம்.

விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கு மாற்றுப் பாடசாலையொன்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

பிள்ளைகளைச் சேர்க்கும் போது வசதிகள் சேவைக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் கட்டணத்தையும் தவிர்ந்த வேறு கட்டணமோ, உதவிப் பணங்களோ பொருட்களோ பாடசாலைக்கோ அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கோ பெற்றுக்கொடுத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு அனைத்துப் பெற்றோர்களையும் அறிவுறுத்துகின்றது. (2)



சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் உலக சுற்றுச் சூழல் கொடி வார நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சேவகன்-சயந்தன் இளைஞன் ஒருவருக்கு கொடி அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம் (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 250 | 240 |
| தக்காளி | 170 | 160 | 150 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 110 | 120 |
| கரட் | 140 | 160 | 150 | 160 |
| பூசணி | 70 | 80 | 70 | 80 |
| புடோல் | 70 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 45 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 80 | 110 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 200 | 160 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| பயற்றங்காய் | 120 | 140 | 140 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 80 |
| பீற்றூட் | 80 | 80 | 70 | 120 |
| கறிமிளகாய் | 250 | 150 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 300 | — | 160 |
| போஞ்சி | 200 | 160 | 170 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 160 | 130 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 10-45 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 90 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 40

பூபதி முருகேசு




லாவனியா துரைரத்தினம்




தீலிபன் தீலிப்




அஜந் குலசிங்கம்




நர்மதா விஜயன்




நிஜமான ஜெகம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்களுக்கு உத்தரவாத விலை பொறிமுறையை உருவாக்குங்கள்

### ஜனாதிபதி அமைச்சருக்கு பணிப்பு



மீன்களுக்கு உத்தரவாத விலையினை நிர்ணயிப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர டாக்டர் ராஜித சேனாரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மீனவ சமூகம், மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திறைசேரி ஆகியவற்றுடன் கூட்டு கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மீன்பிடிதுறையிலுள்ள பிரச்சினைகள் குறித்து அண்மையில் அலரி மாளிகையில் வைத்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி அமைச்சரிற்கு மேற்படி பணிப்புரையினை விடுத்தார். மீன்களுக்கு உத்தரவாத விலையினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மீனவ சமூகத்தினரின் அநேகமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென ஜனாதிபதி கூறினார்.

இதன்போது சில மீனவர்களால் மீன்பிடித்தலுக்காக சட்டவிரோதமான முறையில் டைனமைட் பயன்படுத்தப்படுவது குறித்தும் அமைச்சர் ஜனா திபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு இது குறித்து சம்பவங்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். இச்சந்திப்பில் மீனவர்களின் பலதரப்பட்ட பிரச்சினைகள், மீன்பிடிதுறை முகங்களைமுன்னேற்றுதல் உள்ளிட்ட பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (2)

## இனவாதிகளின் கையில் ஆட்சியை கொடுக்க அரசாங்கம் இடமளியாது

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

**இனவாதிகளின் கையில் ஆட்சியைக் கொடுக்க அரசாங்கம் இடமளிக்காது. எனினும் அரசாங்கத்திற்குள்ளேயே தேசத் துரோகிகள் செயற்படுகின்றனர் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

வடமாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கருத்து மற்றும் சர்வதேச விசாரணைகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கருத்துரையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சம உரிமை வழங்குவது புலிகளின கையில் ஆட்சியினை கொடுப்பதற்கு சமமாகும். சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு பயந்தால் ஆட்சி நடத்த முடியாது" எனவும் அவ் அமைப்பு சுட்டிக்காட்டியது.

வட மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை நாமே உருவாக்குவதற்கு உதவுவதாக அமைந்து விடும். இனவாத கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் தனி ஆட்சியை அமைக்க முயற்சித்து வருகின்றது.

அதற்காகவே தற்போது வடக்கிற்கான சகல அதிகாரங்களையும் கோரி நிற்கின்றனர். எனினும் இனவாதிகளின் கைகளில் ஆட்சியை கொடுக்க அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

முப்பது வருட கால யுத்தத்தினை வெற்றி கொண்டு ஏற்படுத்தியுள்ள சமதானத்தை சீரழிக்க பலர் முயற்சிக்கின்றனர். குறிப்பாக அரசாங்கத்தில் இருக்கும் பலர் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் துரோகம் செய்ய முயற்சிக்கின்றனர்.

குறிப்பாக வாசுதேவ நாணயக்கார போன்றவர்களை உடனடியாக அரசாங்கத்தை விட்டு வெளியேற்ற வேண்டும். அரசாங்க சொத்துக்களையும் அமைச்சுப் பதவிகளையும் தக்க வைத்துக்கொண்டு விடுதலைப புலிகளுக்கும் பிரிவினை வாத அமைப்புகளுக்கும் ஏற்றாற் போல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். (2)

## புலி உறுப்பினர்கள் அகதிகளாக பதிந்து நிதி சேகரிப்பில் ஈடுபாடு

### மலேசியா உள்துறை துணையமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மலேசியாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தில் தம்மை பதிந்து அகதிகளாக நடித்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக மலேசிய உள்துறை துணையமைச்சர் டத்தோ வன் ஜுனைடி துங்கு ஜாபர் தெரிவித்துள்ளார்.

அகதிகள் என்ற அனுதாபத்தின் பேரில் பயங்கரவாதத்தை வளர்க்கும் போலி அகதிகள் யார், விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு தொடர்பிலான தகவல்களை மலேசிய அதிகாரிகள் அறிந்திருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பல உறுப்பினர்கள் தம்மை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்து கொண்டு தவறான தகவல்களை மலேசியர்களுக்கு வழங்கி பணத்தை சேகரித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் கடற்படை கப்பல்களையும் ஆயுதங்களை கொள்வனவு செய்ய போதுமான பணத்தை யும் சேகரித்துள்ளதாக உள் துறை துணை யமைச்சர் எச்சரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் விமானப படையின் பிரதி தலைவர் உட்பட மூன்று புலி உறுப்பினர்களை மலேசிய பொலிஸார் கைது செய்தனர்.

மலேசிய பொலிஸார் மேற் கொண்ட விசேட தேடுதல் நடவடிக் கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புலிகளின் விமானப் படையின் பிரதித் தலைவரான குசாந்தன் கொலன்னாவ, கெரவலப்பிட்டிய மற்றும் அனுராதபுரம் விமானப் படை தளம் ஆகியன மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு முக்கிய சூத்திரதாரியாக செயற்பட்டவர் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்கைது செய்யப்பட்ட மூன்று பேரும் தற்போது இலங்கை பயங்கர வாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். (2)




ஹன்மாட்சியில் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வாழ்வெழுச்சி அபிவிருத்தி திணைக்களம், மது வரி திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம், சுகாதார திணைக்களம் ஆகியன இணைந்து அண்மையில் நடத்திய விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது... (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

## மத்திய கிழக்கு நாடுகளுக்கான இலங்கை தூதுவர்களுக்கு பீரிஸ் விளக்கமளிப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கான இலங்கை தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார். மத்திய கிழக்கு பிராந்திய வலயத்திற்கான இலங்கைத் தூதவரகளை, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் வைத்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ சந்தித்துள்ளார். சுற்றுலாத்துறை, பொருளாதார உறவு கள், தொழில் வாய்ப்புக்கள், முதலீடு உள் ளிட்ட பல்வேறு விடயங்களில் இலங்கைக்கும் குறித்த நாடுகளுக்கும் இடையிலான உறவு களை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது சில தூதரகங்களுக்கு சில இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. இலக்குகளின் அடிப்படையில் தூதரகங்கள் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தார். (2)

## அப்த சுரபி நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றோட்றக்ட் கழகத்தின் அப்த சுரபி நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத் தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. (2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 14 .5 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDA, AAT, CIMA / ஆசிரியர், Factory work (சுவிஸ் PR)
தொ.இ:B/3226

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 50.75
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: B/3227

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: 16.25
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc, MSc – Following / Farm Planning Officer
தொ.இ: B/3228

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 46
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc, MSc, CIMA / நிரந்தர வேலை (சிங்கப்பூர் PR)
தொ.இ: B/3229

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 78 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/ தொழில்: A/L / தையல்
தொ.இ: G/3251

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 81.25 செவ் 7 இல்
தகைமை/தொழில்: O/L / தையல்
தொ.இ: G/3252

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 39
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: G/3253

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 37.25 செவ் 4 இல்
உயரம்: 163 cm
தகைமை/தொழில்: BSc IT / பொறியியலாளர்
தொ.இ: G/3254

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
Email: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# தவளை இளவரசியும் குரங்கு அரக்கர்களும்!

தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் காடுகளில் கர்ராயா என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒரு முறை அவர்களுக்குப் பெரிய ஆபத்து வந்தது.

எங்கு இருந்தோ பயங்கரமான இரண்டு குரங்குகள் அங்கே வந்தன. அந்தக் குரங்குகள் கராயார்களைத் தாக்கின. பலரையும் கடித்துக் கொன்றன. கிராமங்களில் புகுந்து பயிர்களை அழித்தன. குரங்குகளுக்குப் பயந்து மக்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்கள்.

அங்கே ஒரு வீட்டில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் சொன்னான் நான்தான் வீரன். வீரர்களுக்கெல்லாம் வீரன். இதைக் கேட்ட இரண்டாமவன் நானும் வீரன். வீரர்களுக்கெல்லாம் வீரன்! என்றான். மூன்றாமவன் நான் கோழை. உலகிலேயே மிகப்பெரிய கோழை என்றான். உடனே மூத்தவன் எது வந்தாலும் நாம் இந்த இராட்சதக் குரங்குகளைக் கொன்று நம் மக்களைக் காப்பாற்ற வேண்டும். இளையவன் வீட்டிலேயே இருக்கட்டும். அவன் ஒரு பயந்தாங்கொள்ளி அல்லவா... என்றான். இருவரும் தம்பியை வீட்டில் இருக்க வைத்தார்கள். வில் அம்புகளையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றார்கள். அமேசான் நதிக்கரை வழியாக குரங்குகள் வாழ்கின்ற காட்டினுள் நுழைந்தார்கள். அங்கே ஒரு பெரிய குளம் இருந்தது. அவர்கள் ஏற்கனவே தாகத்தால் தவித்துக் கொண்டு இருந்ததால் நீர் பருகு



வதற்காகக் குளத்தை நோக்கிக் குனிந்தார்கள். திடீரென்று உரத்த குரலில் குளம் பேசியது ... குடிக்காதீர் கலக்காதீர் என் தண்ணீரைக் குடிக்காதீர் குளத்தின் உள்ளே ஒரு தவளையும் உண்டே!

திடீரென்று தண்ணீரின் நிறம் மாறியது. குளத்தின் அடியிலிருந்து பெரிய தவளை ஒன்று மேலே வந்தது. வீரர்களே ...நீங்கள் குரங்குகளைக் கொல்வதற்காகப் புறப்பட்டவர்கள் தானே? குரங்குகள் எங்கே இருக்கின்றன என்று நான் சொல்கிறேன். அதற்குப் பதிலாக உங்களில் ஒருவர் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்! என்றது.

ஒரு தவளையைத் திருமணம் செய்து கொள்வதா? எங்களுக்கு விருப்பம் இல்லை! என்ற சகோதரர்கள் தவளையை ஓங்கி உதைத்தார்கள். பாவம் அது... தண்ணீரில் மூழ்கி மறைந்தது. அவர்கள் காட்டின் உட்பகுதியில் நுழைந்தார்கள். இராட்சதக் குரங்குகளின் கூச்சல் கேட்டது. திடீரென வெளிப்பட்ட அந்தக் குரங்குகள் மரக் கிளைகளை ஒடித்து அவர்களைத் தாக்கின. சகோதரர்கள் இருவ்ரும் ஓடத் தொடங்கினார்கள். ஓடி ஓடிக் காட்டில் திசை தவறிவிட்டார்கள்.

சகோதரர்களைக் காணவில்லையே என்று அஞ்சினான் கடைசித்தம்பி. அவர்களைத் தேடிக் கொண்டு பயத்துடன் காட்டுக்கு வந்தான். அவனுக்கும் மிகவும் பசித்தது. காட்டுச் செடிகளில் சில செடிகளின் கிழங்குகளைத் தோண்டிச் சாப்பிட நினைத்தான்.



அவன்தான் போதிய பலம் இல்லாதவன் ஆயிற்றே! கிழங்குகளைத் தோண்டி எடுக்க அவனால் முடிய வில்லை. பறவைகளை வேட்டையாடுவதைத் தவிர்த்தான். அங்கும் இங்கும் நடந்தான். அப்போது ஒரு பொந்தில் இருந்து பாம்பு இறங்கி வந்தது. அடேய் கோழைப் பையா இதோ! மந்திர சக்தி வாய்ந்த அம்பு! என்று ஓர் அம்பைக் கொடுத்து விட்டு

"அம்பைக் கொண்டு சென்றிடுவாய்
துன்பம் தருவோரை வென்றிடலாம்!"

என்று பாடியது. மந்திரசக்தி பெற்ற அம்பை அவன் பணிவுடன் பெற்றுக்கொண்டான். பிறகு அந்தப் பாம்பு தன் வாயில் இருந்து கொஞ்சம் விஷமும் எண்ணெயும் எடுத்தது. இரண்டையும் நன்றாகக் குழைத்து அவன் உடலில் பூசியது. உடனே பெரிய பலசாலியாக மாறி விட்டான்.

"அரக்கக் குரங்குகளை நானே
அடித்துக் கொள்வேன் நிச்சயம்!
காட்டில் தொலைந்த அண்ணன்களைக்
கண்டு பிடிப்பேன் கட்டாயம்!"

என்று பாடினான். அப்போது பாம்பு அந்தக் குரங்குகள் உண்மையிலேயே குரங்குகள் அல்ல. இரண்டு அரக்கர்கள் தான் குரங்கு வேடத்தில் திரிகிறார்கள். குறிபார்த்து சரியாக அம்பை எய்தால் இரண்டு அரக்கர்களும் செத்து விழுவார்கள். நீ செல்லும் வழியில் குளக்கரையில் ஒரு தவளையை சந்திப்பாய். அந்தத் தவளை சொல்வது போல் செய்! என்றது.

அவன் வில் அம்புடன் குரங்குகளைத் தேடிச் சென்றான். வழியில் பெண் தவளையைப் பார்த்தான். அந்தத் தவளை என்னை நீ திருமணம் செய்து கொள்வாயா? என்று கேட்டது. பாம்பு எவ்வளவு சரியாகச் சொல்லி இருக்கிறது. தவளையைத் திருமணம் செய்து கொள்வோம். அது நன்மை தரும் என்று நினைத்த அவன் ஒரு மலர்க் கொடியைச் சூட்டி தவளையை திருமணம் செய்து கொண்டான். தவளையும் அவனும் காட்டு வழியே நடந்தார்கள். தூரத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் பொந்தும் மிகப்பெரிதாக இருந்தது. பொந்துக்குள் தெரிந்தன குரங்குகளின் தலைகள். உடனே தவளை சொன்னது:

"தலைகள் தெரியுது அஞ்சாதே!
அம்பு தொடுப்பாய் தயங்காதே!"

அவன் அம்பு எய்தான். அது சரியாக ஒரு குரங்கின் நெற்றியில் பதிந்தது. உடனே இரண்டு குரங்குகளும் இறங்கி ஓடின.

அவன் மீண்டும் அம்பு எய்தான். குரங்குகளின் மேற்தோல் கழன்று விழுந்தன. குரங்குத் தோலில் இருந்த அரக்கர்கள் மடிந்தார்கள்.

அரக்கர்களிடம் இருந்து கழன்று விழுந்த குரங்குத்தோலை எடுத்தான் தம்பி. அதை ஒரு கொடி போலக் கம்பில் கட்டி உயர்த்திக் கொண்டு ஆடினான்.

"வென்றேனே நான் வென்றேனே
அரக்கக் குரங்குகளை வென்றேனே!"

பிறகு தவளையும் அவனும் காட்டுக்குள் தொலைந்த அண்ணன்களைத் தேடிப்புறப்பட்டார்கள். ஓர் இடத்தில் அவர்களைக் கண்டு பிடித்தார்கள். தம்பியை அணைத்துக்கொண்ட அண்ணன்கள் தம்பி உனது பணிவுதான் உனக்கு வெற்றியைக் கொடுத்து இருக்கிறது. வீரம் இருந்தும் எங்கள் ஆணவமே தோல்வியை கொடுத்தது என்றார்கள்.

பிறகு அவர்கள் வீட்டை அடைந்தார்கள். வீட்டுப்படியில் கால் வைத்ததும் அந்தத் தவளை அழகான இளவரசியாக மாறியது. ஒரு சாபத்தின் காரணமாக நான் தவளையாக மாறிக் குளத்தில் வாழ்ந்தேன். உனது கருணையால் சாபத்தில் இருந்து விடுபட்டு விட்டேன். இனி நாம் மகிழ்ச்சியாக வாழலாம்! என்றாள். பழைய வீடு இருந்த இடத்தில் அழகான அரண்மனையைக் கட்டி அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்தார்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

06.2014
10

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1190 - மூன்றாவது சிலுவைப் போர்: புனித ரோமப் பேரரசன் முதலாம் பிரெடெரிக் ஜெருசலேம் நகரை நோக்கிய படையெடுப்பின்போது சாலி ஆற்றில் மூழ்கி இறந்தான்.
- 1801 - சிவகங்கையின் சின்னமருது "ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழ வேண்டும்" என்ற தனது சுதந்திரப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1846 - கலிபோர்னிய குடியரசு மெக்சிக்கோவிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1898 - அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படையிடம் நோர்வே வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மற்றும் பிரான்சுக்கு எதிராக இத்தாலி போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் ஆங்கிலக் கால்வாயை அடைந்தன.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிக்கு எதிராக கனடா போரை அறிவித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நோர்வே ஜேர்மனியர்களிடம் சரணடைந்தது.
- 1945 - ஆஸ்திரேலியப் படைகள் புரூணையை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.
- 1967 - இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததில் ஆறு-நாள் போர் முடிவுக்கு வந்தது.
- 1986 - யாழ்ப்பாணம், மண்டை தீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1996 - வடக்கு அயர்லாந்தில் சின் ஃபெயின் பங்கு பற்றாத நிலையில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.
- 1999 - கொசோவோவில் இருந்து சேர்பியப் படையினர் விலக எடுத்துக்கொண்ட முடிவை அடுத்து நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தியது.
- 2003 - நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1925 - வே. தில்லைநாயகம், தமிழக நூலகத்துறையின் முன்னோடி
- 1971 - பாபி ஜிண்டல், அமெரிக்கா, லூசியானாவின் ஆளுநர்

### இறப்புகள்

- 1836 - அன்ட்ரே-மரீ அம்பியர், பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1775)
- 2004 - ரே சார்லஸ், அமெரிக்க இசைக்கலைஞர் (பி. 1930)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## ஏழாமிடத்தில் குரு வருகை! இனிமேல் கவலை ஏதுமில்லை!



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**ஏழாமிடத்தில் குரு வருகை! இனிமேல் கவலை ஏதுமில்லை!** **70/100**

**மற்றவர்களின் மனக் குமுறல்களை மறுப்புச் சொல்லாமல் கேட்டுக் கொள்ளும் மகர இராசிநேயர்களே!**

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி. வைகாசி 30 முதல் வசந்த காலம் உங்களுக்கு பிறந்து விட்டது. ஆசைகள் அரங்கேறும். ஆதாயம் அதிகரிக்கும். ஓசைப்படாமல் ஒப்பற்ற நல்ல காரியங்கள் பலவும் செய்து முடிக்கப் போகிறீர்கள். காசு, பணம் அதிகரிக்கும். காலை முதல் மாலை வரை உழைத்தும் கை நிறைய வருமானம் வரவில்லையே என்று நினைத்த உங்களுக்கு இனி பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படப்போகிறது.

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்கினாலும், சப்தம ஸ்தானத்தில் இருந்துகொண்டு அல்லவா பார்க்கிறார். என்வே, புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பெரிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வந்துசேரும். டிசம்பர் மாதம் சனிப் பெயர்ச்சிக்குப் பின்னால் உங்கள் இராசியையே சனி பார்க்கப் போகிறார். எனவே, உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படும். நண்பர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமென்றாலும், முன்கோபத்தால் நல்ல வாய்ப்புக்களை இழக்க நேரிடலாம்.

**பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கையானவர்கள்!**

உடன்பிறப்புக்கள் மீது உங்களுக்குப் பாசம் அதிகமாக இருக்கும். இருப்பினும் அவர்களுக்கு உங்கள் மீது பாசம் அதேபோல் இருக்குமா என்பது சந்தேகம்தான். மற்றவர்களின் குடும்ப இரகசியத்தை மனதில் பதித்துக்கொள்வீர்கள். ஆனால், உங்கள் குடும்ப இரகசியத்தை ஒருவரிடமும் சொல்ல மாட்டீர்கள். விதியின் மீது முழு நம்பிக்கை வைப்பவர் நீங்கள். உணர்ச்சி வசப்படுவதன் மூலமாக உயர்ந்த மனிதர்களின் நட்பை இழக்க நேரிடலாம். பணம் சேர்ப்பதை குறிக்கோளாக கொண்டிருப்பீர்கள். கொடுத்த வாக்கை எப்படியும் நிறைவேற்றிவிடவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட குணங்களைப்பெற்ற உங்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி, தரும் பலன்கள் பற்றிப் பார்ப்போம்.

**ஏழினில் குருதான் வந்தால்**
**எதிர்காலம் சிறப்பாய் மாறும்!**
**வாழ்விலே வசந்தம் சேரும்!**
**வருமானம் திருப்தியாகும்!**
**சூழ்ந்திடும் பகையும் விலகும்!**
**தொடுத்திடும் மாலை சேரும்!**
**கோள்களில் குருவை நீங்கள்**
**கும்பிட்டால், நலம் கிடைக்கும்!**

என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, எதிர்காலம் சிறப்படைய எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும். திருமண வாய்ப்புக்கள் கைகூடவில்லையே என்ற கவலை அகலும். காரசாரமாகப்பேசிய உறவினர்கள் இனி பிரச்சினை வேண்டாம் என்று ஒத்துப் போக முன்வருவர். நிலம் வாங்கலாம், வீடு வாங்கலாம் என்று திட்டம் தீட்டியவர்கள், ஆசைகள் நிறைவேற அந்நிய இனத்தவர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். கூடுதல் இலாபம் தொழிலில் வர நாடி வரும் நண்பர்களின் நல்லாதரவு கிடைக்கும்.

பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிபிற்கு வரும். இடையிடையே தேக நலக் குறைவு தலைதூக்கினாலும் தெய்வ வழிபாட்டின் மூலம் உடல்நலம் சீராகும். கூட்டாளிகள் உங்களோடு வுந்திணைந்து பணிபுரிவர். வாட்டங்கள் அகலும். வறுமை விலகும். மாற்றங்களை நீங்கள் எப்படி எதிர்பார்த்தீர்களோ, அதன்படியே வந்துசேரும். உறவினர்களின் பகை அகல, மூன்றாம் நபர்களின் தலையீடுகள் நம்பிக்கைக்குரிய விதம் இருக்குமா என்பது சந்தேகம்தான்.

**வெற்றிதரும் வியாழனின் பார்வை!**

குரு உங்கள் இராசிக்கு 3,12 க்கு அதிபதியானவர். அவர் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வையை 1,3,11 ஆகிய இடங்களில் பதிக்கிறார். எனவே, அந்த ஸ்தானங்கள் புனிதமடைகின்றன. எனவே, சகோதரர்கள் உதவி கிடைக்கும். தாயின் உடல்நிலை சீராகும். தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். பங்குதாரர்களுடன் பிரச்சினைகளை வரவழைத்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. இக்காலத்தில் தகாத நட்புக்களை விலக்குவது அவசியம். தந்தை வழி உறவினர்களையும் அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.

**ஜென்மத்தைக் குருதான் பார்த்தால்,**
**சிரமங்கள் அகன்று ஓடும்!**
**மூன்றினைக் குருதான் பார்த்தால்,**
**முயற்சியால் வெற்றி கிட்டும்!**
**பதினொன்றைக் குருதான் பார்த்தால்,**
**பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

## மகரம்



எனவே, குரு பார்க்கும் இடமெல்லாம் நன்மை கிடைக்கும். கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் இனி மாறும். உடன்பிறப்புகள் முதல் உடனிருப்பவர்கள் வரை ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர். மூடிக்கிடந்த தொழிலுக்கு இனி திறப்புவிழா நடத்திப் பார்ப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், உன்னத நிலையைக் காண்பர். உத்தியோக மாற்றத்தைக் கருதி உயரதிகாரிகளை சென்று பார்த்தால், உங்கள் எண்ணம் பூர்த்தியாகும். நல்ல வாய்ப்புக்களையே இந்த குருபார்வை வழங்கப் போகிறது. நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு அனுசரிப்பாக இருப்பர். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களில் கையெழுத்துப்போடும் வாய்ப்புகளை யோகமான ஜாதகத்தைப் பெற்றவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். சஷ்டாஷ்டம தோஷம் மற்றும் சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள் யோசித்து கையெழுத்திடுவது நல்லது. மூத்த சகோதரத்தின்மூலம் இயல்பாக சுபகாரியங்கள் நடைபெறும். வாழ்க்கைத் துணை வழியிலும் வாரிசுகள் வழியிலும் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம்.

**சஞ்சாரப் பலன்கள்!**

குரு சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- இந்தக் காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொழிலில் திடீர் திருப்பங்கள் ஏற்பட்டு செல்வ நிலையை உயர்த்தும். பயணங்கள் அதிகரிக்கும். அடுத்தவர்கள் நலன் கருதி அலைச்சல்களை மேற்கொள்வீர்கள். குடும்பக் கவலைகளும், கூட இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினையும் அகலும்.

குரு சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- தங்கு தடைகள் அகல பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரமிது. குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் அகலும். குடியிருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகளும் விலகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம்தான். அரசாங்க உதவி பெற்றவர்கள் அதன் விளைவாக சில சிக்கல்களையும், சிரமங்களையும் சந்திக்க நேரிடும். தம்பதிகளுக்குள் தகராறுகள் வராமல் இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கியிருக்கும். வியாபாரத்தில் விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- புதன் உங்கள் இராசிக்கு 6,9 க்கு அதிபதியானவர். எனவே, இக்காலத்தில் உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. செய்தொழில் சீராக நடைபெறுவதில் சில தடைகள் ஏற்படும். மறைமுகப் பகை அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினையில் மூன்றாம் நபர் தலையிடுவதன் மூலம் மனக்கசப்பு தரும் தகவல்கள் வந்து சேரலாம். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். தந்தைவழி உறவில் நெருக்கம் ஏற்படும். முன்னோர் சொத்துக்களில் இருந்த வழக்குகள் நல்ல முடிபிற்கு வரும். அனுமன் வழிபாடு பலன் தரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு எள்தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள். யோக பலம் பெற்ற நாளில் ஆஞ்சநேயரை வழிபட்டு வெற்றியை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு யோகம் தரும் பெயர்ச்சியாகவே இருக்கப் போகிறது. மாலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கும், மழலை கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டவர்களுக்கும் மகிழ்ச்சி கிடைக்கும் விதத்தில் அனைத்தும் நிறைவேறும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். தாய் வழி அனுகூலம் உண்டு. முத்தான வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக இருக்கப் போகிறீர்கள். குழந்தைகளும் குடும்பப் பெரியவர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவைகள் கிடைக்கலாம். குடும்பச் சுமை குறையும். குழந்தைகள் வழியே சுபச் செலவுகளும், சுபகாரியங்களும் நடைபெற்று மகிழ்விக்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக்காலில் அதிசாரமாகச் செல்கின்றார். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ரகதியில் இருக்கிறார். தொடர்ந்து 14.04.2015 வரை வக்ர கதியிலேயே சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீட்டுக் கவலைகள்.மேலோங்கும். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகுவர். கெட்டிக்காரர்களாக நீங்கள் இருந்தாலும் சில ஏமாற்றங்களைச் சந்திப்பீர்கள். 12க்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம் தான் என்றாலும் சப்தம ஸ்தானத்தில் வக்ரம் பெறுவதால் வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் வந்து அலை மோதும். வாரிசுகளால் சில தொல்லைகள் வந்துசேரும். வாகனப் பழுதுகள் அதிகரிக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கலாமா என்று யோசிப்பீர்கள். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

நோய்க்கான அறிகுறி தென்படும்பொழுது அருகிலுள்ள மருத்துவர்களை அணுகி ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. கூட்டு முயற்சிகளில் மாற்றம் செய்வீர்கள்.

நாளை கும்பம்......



குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**

- **13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**
- **29.06.2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**
- **28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்)**
- **03.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**
- **17.12.2014 முதல் 21.12.2014 வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி.**
- **22.12.2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**
- **15.04.2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**
- **05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் உதவி இதுதான்

சென்ற வாரத் தொடர்ச்சி....



### தீக்காயம்:

முதலில் பாதிக்கப்பட்டவரை அந்த இடத்திலிருந்து அப்புறப் படுத்த வேண்டும். உடலில் துணி ஏதேனும் இருந்தால், அதைப் பிடித்து இழுக்காமல், கத்தரியால் கவனமாக வெட்டி, முழுமையாக அப்புறப்படுத்திவிட வேண்டும். நகைகள் இருந்தாலும் அப்புறப் படுத்திவிட வேண்டும்.

தீக்காயம் பட்ட இடத்தில், குழாய்த் தண்ணீர்படும்படி 10 நிமிடங்கள் அப்படியே வைத்திருக்கலாம். எந்தக் களிம்பும், ஒயின்மென்ட்டும் தடவக் கூடாது.

கம்பளி, ஜமக்காளம் போன்ற தடிமனான துணிகளைப் போரத்தி தரையில் உருளச் செய்யும்போது, அந்த வெப்பத்தில் திசுக்கள் வெநது விட வாய்ப்புள்ளது. ஒருவர் ஆடையில் தீப்பற்றிவிட்டால், உடனடியாகத் தண்ணீரை அவர் மேல் ஊற்றி, தீ பரவாமல் அணைக்கலாம். தண்ணீர் ஊற்ற வழி இல்லை என்னும்போது, கம்பளி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். ஆனால், கம்பளியை நீண்ட நேரம் உடலில்வைத்திருக்கக்கூடாது.

தலை மற்றும் கழுத்தில் தீக்காயம் இருப்பின், வாய் வழியே குடிக்கவோ, சாப்பிடவோ எதையும் கொடுக்கக் கூடாது.

கொப்புளங்கள் தோன்றினால், அதை உடைத்து விடக் கூடாது. காயத்தைக் கையால் தொடவே கூடாது. மிகப் பத்திரமாகத் தூக்கிக் கொண்டு, மருத்துவமனைக்குக் கொண்டுசெலல வேண்டும்.

தீக்காயம் அடைந்தவரைக் காப்பாற்றச் சென்றவர்களே தீக்காயம் அடைந்ததாகப் பலமுறை படித்திருப்போம். எனவே, தீ விப




த்தில் காப்பாற்றச் செல்பவர், தன்னுடைய முன்புறத்தில் கம்பளியைப் பாதுகாப்பாக் கட்டிக் கொண்டு பாதிக்கப்பட்டவரை அணுகும்போது, தீக்காயம் ஏற்படாமல் பாதுகாப்பாக இருக்கலாம்.

இரசாயனம் அல்லது ஆசிட் போன்றவற்றால் காயம் ஏற்பட்டாலும், தொடர்ந்து 20 நிமிடங்களுக்கு அந்த இடத்தை ஓடும் தண்ணீரால் கழுவ வேண்டும்.

### விஷக்கடி

குளவி போன்ற விஷப்பூச்சிகள் கடித்தால், அதன் கொடுக்கு ஒட்டியிருந்தால், அதை மிகக் கவனமாக அப்புறப்படுத்த வேண்டும். ஏனெனில், அதில்தான் விஷம் இருக்கும். நாம் நேரடியாகப் பிடுங்கி எடுத்தால், அதில் இருக்கும் விஷம் இன்னும் உள்ளே இறங்க வாய்ப்பு உண்டு. அப்படியே சாய்வாக ஒரு கத்தியால் சீய்ப்பது போல, கொடுக்கைச் சீவி விட வேண்டும்.

தேள் கொட்டினால், டாக்டரிடம் போய்விட வேண்டும். நாம் எதுவுமே செய்ய முயற்சிக்கக் கூடாது. ஏனெனில் விஷம் இரத்தத்தில் பரவும் வாய்ப்பு உண்டு.

பாம்புக்கடி என்று நிச்சயமாகத் தெரிந்தால், அது நிச்சயம் தீவிர சிகிச்சை தேவைப்படும் பிரச்சினை. கடிவாயில் வாயைவைத்து உறிஞ்சுதல், கடித்த இடத்துக்கு மேலே இறுக்கிக் கட்டுதல் போன்றவற்றைச் செய்யக் கூடாது. இவற்றால் இரத்த ஓட்டம் தடைப்பட்டு, விஷம் வேகமாகப் பரவ வாய்ப்பு இருக்கிறது. உடனடியாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். பாதிக்கப்பட்டவர் மயக்கம் ஆகாமல் இருந்தால், அவரிடம் பேசி, "ரிலாக்ஸ்' செய்யலாம்.

கை அல்லது காலில் பாம்பு கடித்திருந்தால், அதை அசைக்கக் கூடாது. அப்படியே, எவ்வளவு விரைவாக மருத்துவமனைக்குச் செல்கிறோமோ, அவ்வளவு நல்லது.

எந்த விஷக்கடி என்றாலுமே, குடிக்கத் தண்ணீர் கொடுக்கக் கூடாது. அரை மயக்கத்தில் இருப்பவருக்கு தண்ணீர் கொடுத்தால், அது நுரையீரலுக்குள் சென்று விடும்.

நாய்க்கடி என்றால அந்த இடத்தை சோப் தண்ணீரால் நன்றா கக்கழுவ வேண்டும்.

எந்தக் கடியாக இருப்பினும் ஐஸ் அலலது வெந்நீர் ஒத்தடம் கொடுக்கக் கூடாது.

### வலிப்பு

மூளையில் திடீரென ஏற்படும் உந்துதல் அல்லது திடீர் விசை காரணமாக ஏற்படுவதுதான் வலிப்பு. அந்தச் சமயத்தில் அவர்களின் கை, கால் வேகமாக உதறும்போது, நாம் அவர்களைப் பிடிக்கவோ, அசைவைக் கட்டுப்படுத்தவோ முயற்சிக்கக் கூடாது. ஏனெனில் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே அந்த இயக்கம் இருக்காது. அவர்களை அப படியே விட்டுவிட வேண்டும்.



அவர்களைச் சுற்றிலும் மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் இருந்தால், வலிப்பு வந்தவர் இடித்துக் கொள்ளாமல் அப்புறப் படுத்திவிட வேண்டும். ஏதாவது கூர்மையான பொருட்களோ, கூர் முனையுள்ள பொருட்களோ அருகில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எதிலும் இடித்துக்கொள்ளாமல் / காயப்படுத்திக்கொள்ளாமல் இருப்பதற்காக, சுற்றிலும் தலையணைகள் போடலாம். தலைக்கு அடியிலும் ஒருதலையணை வைக்க வேண்டும்.

வலிப்பு வந்தவரிடம் சாவிக் கொத்து அல்லது மற்ற இரும்பு பொருட்கள் கொடுப்பது தவறு. அதனால் அவர்கள் காயம்பட வாய்ப்பு உண்டு.

நாக்கைக் கடித்துக்கொள்ளாமல் இருப்பதற்கு, சுத்தமான துணியைச் சுருட்டி பற்களுக்கு இடையில் வைக்கலாம்.

வலிப்பு நின்ற பின், மயக்க நிலையில் இருக்கும் அவர்களை, ஒருபக்கமாகத் திருப்பிப் படுக்க வைக்க வேண்டும். அப்போதுதான் வாந்தி எடுத்தால் கீழே போயவிடும் இல்லையென்றால், உள்ளேயே போய்விடும் அபாயம் உண்டு.

அவரைச் சுற்றிக் கூட்டம் போடாமல், அதிக காற்று வருவது போல விலகி நிற்க வேணடும்.

கண்டிப்பாகத் தண்ணீர் கொடுக்கக கூடாது.


### கண்ணுக்குள் ஏதாவது விழுந்துவிட்டால்:

கண்ணுக்குள் ஏதேனும் தூசி, குச்சி, கண்ணாடித் தூள் போன்ற பொருள் விழுந்துவிட்டால், 20 நிமிடம் தொடர்ந்து கண்ணில் தண்ணீரை அடித்தபடி இருக்க வேண்டும்.

(அடுத்த வாரம் தொடரும்)

**ஜூனியர்விகடன்**

# குருதி நன்கொடையாளர்களினால் வருடாந்தம் 350,000 அலகு இரத்ததானம் வழங்கப்படுகிறது




## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)— இரத்ததானம் வழங்குவதில் முதன்மையான நாடுகளில் இலங்கையும் ஒன்று எனவும் வருடாந்தம் சுயாதீனமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் அலகு இரத்ததானமாக பெறப் படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி உலக இரத்த நன்கொடையாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. "தாய்மாரைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பான இரத்தம்" எனும் தொனிப் பொருளில் இம்முறை இந்த தினம் அனுஷ்டிக கப்படவுள்ளது.

உலக இரத்த நன்கொடையாளர் தின சர்வதேச மாநாடு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் முழுமையான அனுசரணையுடன நடைபெறும் இந்த சர்வதேச நிகழ்வில் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சுகாதாரத் துறை பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி மாநாட்டை முன்னிட்டு செய்தியாளர் மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றதுடன் மாநாட்டில் குடும்ப சுகாதார செயலணியின் பிரதிப் பணிப்பாளர் சித்ரமாலி டி சில்வா விளக்கமளித்தார்.

உலகில் பிரதி வருடமும் பிரசவத்தின்போது ஏற்படும் நோய்களினால் 2 இலட்சத்து 80ஆயிரம் தாய்மார் மரணமடைகின்றனர். இவற்றில் 99 வீதமான மரணங்கள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலேயே இடம்பெறுகின்றன.

இலங்கையில் இத்தகைய மரணங்கள் வருடாந்தம் 120இற்கும் 150இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையாகவுள்ளன. இது 29 வீதமாகவுள்ளதுடன் பிரசவசத்தின் போது ஏற்படும் அதிகமான இரத்தப் போக்கே இதற்கு முக்கிய காரணமாகுமெனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் சுயாதீன இரத்த நன்கொடையாளர்களினால் 3இலட்சத்து 50ஆயிரம் அலகு இரத்தம் தானமாக வழங்கப்படுகிறது.

இந்த அனைத்து இரத்தப் பொதிகளும் எச். ஐ. வி., ஹெபடய்டிஸ். மலேரியா. சிபிலஸ் உட்பட 5 நோய்கள் தொடர்பான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

இம்முறை கொழும்பில் நடைபெறவுள்ள உலக இரத்த நன்கொடையாளர் தின மாநாட்டையொட்டி பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரத்த நன்கொடையாளர் வாரம் நேற்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள் ளதுடன் யாழ்ப்பாணம். மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலிருந்து வாகனப் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவை 14 ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள் ளன.

அன்றைய தினம் கொழும்பிலுள்ள இரத்த பரிவர்த்தனை தேசிய நிலையத்துக்கருகில் இரத்த நன்கொடை யாளர்கள் கௌரவிக்கப் படுவதுடன் பொதுமக்கள் விசேட கொடியில் கையொப்பமிடும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

இதனையொட்டி நாளை மறுதினம் 2 ஆயிரம் பேர் இரத்த தானம் வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

## மீனவர்கள் கைது குறித்து இந்திய மத்தியரசு எதிர்ப்பு

(கொழும்பு)

மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு இந்தியா எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

82 இந்திய மீன வர்களை இலங்கைக் கடற்படையினர் அண்மையில் கைது செய்திருந்தனர்.

அத்து மீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களே இவ்வாறு தலைமன்னார், நெடுந்தீவு உள்ளிட்ட கடற் பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.


எனினும், மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு இந்திய மத்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

மீனவர் கைது தொடர்பிலான பிரச்சினை குறித்து இலங்கை அதிகாரிகளிடம் எதிர்ப்பை வெளியிடுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இது குறித்து இலங்கை அதிகாரிகளிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



66

...'திருடாதே பாப்பா திருடாதே' பாட்டை சுதி போகும் போக்கில் பாடாமல் என் விதி போகும் போக்கில் பாடுகிறேன்.

அதில் 'இருக்கிறதெல்லாம் பொது வாய்ப்போனால்' என்ற வரிக்குப் பின் ஒரு ஹம்மிங் வரும்.

அந்த ஹம்மிங்கின் உயரத்திற்குப் போனால் பாட்டைப் போலவே நானும் கிழிந்து விடுவேன் என்பதால் அதைத் தவிர்த்துவிட்டுப் பாடினேன்.

என் மாமா விடவில்லை.

'அதைப் பாடினால்தான் உனக்குப் பயிற்சி வரும்' என்றார்.

அதைப் பாடியே முடித்தேன்.

தேனியிலிருந்து வண்டி மாடுகள் வழக்கத்தை விட வேகமாய் நடப்பதாய் எல்லோரும் சொன்னார்கள்.

குடை கண்டு மட்டுமே மிரளும் மாடுகள் என் குரல் கண்டு மிரண்டு விரைந்ததை நானறிவேன்; வண்டிக்காரர் சடையன் அறிவாரா?

இந்தச் சென்னை மண்ணில் எனக்கு முதன் முதலில் கூடு கட்டிக் கொடுத்தவர் என் சித்தப்பா மாயன் என்றால், வீடு கட்டிக் கொடுத்தவர் என் மாமா மோகன்.

என்னைத் தன் வீட்டில் இருத்திக் கொண்டார் என்பதற்காக மட்டுமல்ல, அவர் மீது நான் அன்பு பாராட்டுவது- என் அறியாமையை, அடங்காமையை, அப்பாவித்தனத்தைப் பொறுத்துக் கொண்டார் என்பதற்காகவும்தான்.

இன்று சென்னையில் எனக்குத் தெரிந்த குறைந்த இடங்களெல்லாம் அவர் சைக்கிள் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த சாலைகள்தாம்.

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் எங்கள் குடும்பத்துக்கும் எங்கள் தொகுதிக்கும் செய்த ஒரு மிகப் பெரிய சேவை என் மாமாவுக்கு வேலை வாங்கிக் கொடுத்ததுதான்.

அந்த அடிசன் கம்பெனி வாசலில் ஒவ்வொரு மாதத்தின் ஏழாம் திகதியிலும் வியர்வையில் குளித்த சம்பளப்




பணம் தந்து என் மாமா என்னை வளர்த்திருக்கிறார்.

நான் வளர்ந்து வருவேன் என்றோ வந்து தருவேன் என்றோ வழங்கிய பணமல்ல அந்தப் பணம்.

இன்று என் உதிரத்திலிருக்கும் உப்பு அவர் போட்டு வளர்த்தது என்பதை மறைத்தால் அது தப்பு.

மெல்லிய மனிதர்.

அடிக்கடி உணர்ச்சிவசப்படும் உண்மையான மனிதர்.

போலியாகப் புன்னகைக்கவோ, போலியாக அன்பு செலுத்தவோ தெரியாத- விரும்பாத கிராமத்து மனிதர்.

எல்லோரின் விருப்பத்துக்கெதிராய் நான் திருமணம் செய்து கொண்டேன் என்று தெரிந்ததும் என்னைத் தேடி

மூர்க்கமாய் வந்த முதல் மனிதர் அவர்தான்.

கதவில்லாத ஏழையின் வீட்டுக்குள் புகுந்த புயலாய் உள்ளே வந்தார்.

சிகரெட் துண்டுகளின் நுனிகளாய்ச் சிவந்திருந்தன அவர் கண்கள்.

கல்லூரியில் நான் பெற்ற பரிசுக் கோப்பைகளையெல்லாம் அவர் வீட்டில் வைத்து அழகு பார்த்து வந்தார்.

அவற்றையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்தார்.

கூடமெங்கும் சிதற சுவர் பெயர விசிறி அடித்தார்.

நம்மை நேசிக்கிறவர்கள் நம்மைக் கோபிக்கிறபோது நம்மால் கோபிக்க முடியாது என்ற உண்மையை நான் அறிந்துகொண்ட அனுபவங்களுள் அதுவும் ஒன்று.

பட்டம் எங்கே பறந்தாலும் அதைப் பற்றியிருப்பவனால் மட்டுமே அது பறக்க முடிகிறது.

நானும் பட்டம்தான்.

ஆனால் பற்றியவரின், பற்றியிருப்பவரின் கரங்களை மறந்து விடுகிற பட்டமில்லை.

என் மாமாவுக்கும் இது தெரியும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் என் மாமாவால் நிறுத்த முடியாதவை மூன்று.

தேநீர்-

சிகரெட்-

என் மீது பாசம்-

முதலிரண்டு விடயங்களை நிறுத்துவதற்கும் மூன்றாவது விடயத்தை நீட்டுவதற்கும் நான் முயற்சி செய்ய வேண்டும்.

(தொடரும்)

-வைரமுத்து-

# சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு பறித்தெடுக்கப்படுகின்றது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

**சிறுபான்மையினருக்கு ஒரு கையில் அதிகாரம் வழங்கப்பட்டு மறுகையில் பறிக்கப் படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

கண்டி யட்டிநுவர பிரதேசத்தில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக முன்னாள் படையதிகாரிகள் நியமிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கில் சிவிலியன்கள் ஆளுநராக நியமிக்கப்படும் அதேவேளை, வடக்கு கிழக்கில் மட்டும் முன்னாள் படையதிகாரிகள் ஏன் ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றார்கள் என்பது புரியவில்லை என ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். சிறுபான்மை சமூகத்திற்கு ஒரு கையில் மாகாணசபை அதிகாரங்களை வழங்கி மறுகரத்தில் அந்த அதிகாரங்களை பறித்தெடுக்கும் செயன்முறையாக தாம் இதனை நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் முன்னாள் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு குறித்த மாகாண சபைகளினது முதலமைச்சர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், ஏனைய மாகாணங்களில் இவ்வாறான பிரச்சினைகள் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அமர்வுகளை புறக்கணிக்கப் போவதில்லை எனவும், தமது கருத்துக்களை அமைச்சரவையில் பகிரங்கமாக தெரிவிக்கவே விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.(2)

# பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கையில் பயன் ஏற்படாது

## அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி.சுட்டிக்காட்டு

ஜனாதிபதி உச்ச நீதிமன்றிற்கு பதிலளிக்க கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். 30 ஆண்டுகளாக நாட்டில் நிலவி வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள போதினும் மெய்யான அபிவிருத்தியை எட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சமூக, அசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு வழங்கப்படாமையே இதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமையில் ஏற்பட்டுள்ள பின்னடைவு மற்றும் ஊழல் மோசடிகளே இதற்கான காரணிகளாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்று முழுதாக நிராகரிக்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச ஊடகங்கள் ஒரு பக்கச்சார்பாக செயற்படக் கூடாது. அரச ஊடகங்கள் பொது மக்களின் சொத்துக்கள் எனவும், தனியார் ஊடகங்கள் தமக்குத் தேவையான கருத்துக்களை திணிக்காது மெய்யான விடயங்களை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஊடகங்களின் சமநிலைத்தன்மையை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளினால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பேச்சுவார்த்தை நடத்தப்படுமே தவிர வேறு எதுவும் நடைபெறாது எனவும் சரியான கொள்கையுடன் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் இறங்க வேண்டியது அவசியமானது எனவும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்போகும் இரு சவால்களிலிருந்து தப்பிக்குமா இலங்கை அரசு?

வரப்போகும் நாட்களில் இலங்கை அரசாங்கம் முக்கியமான இரண்டு பிரச்சினைகளை எதிர்கொள்ளப் போகிறது. முதலாவது பிரச்சினை சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகளின் ஒரு அங்கமான ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலிருந்து வரப்போகிறது. இரண்டாவது பிரச்சினை இந்தியாவிடமிருந்து வரப்போகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான குழு அடுத்த சில நாட்களுக்குள் நியமிக்கப்படவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் தொடக்க உரையிலோ, அதற்கு முன்னதாகவோ இந்த விசாரணைக் குழுவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டதும் அரசாங்கம் அடுத்து என்ன செய்யப் போகிறது என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது. ஏனென்றால் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிப்பதாகவும் அதன்படி அமைக்கப்படும் விசாரணைகளையோ, அதன் முடிவையோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் இலங்கை அரசாங்கம் முன்னரே கூறிவிட்டது.

ஆனால், ஐ.நாவின் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று இன்னமும் ஐ.நாவுக்கு அதிகாரபூர்வமாக அரசாங்கம் அறிவிக்கவில்லை.

விசாரணைக்குழு அமைக்கப்பட்டதும் அது பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பை ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தமக்குத் தெரியப்படுத்தியதும் இலங்கை அரசின் நிலைப்பாடு ஐ.நாவுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஆனால், விசாரணைக்குழு தொடர்பான நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறி வருகின்றனர்.

அதைவிட, யார் விசாரணைகளை நடத்தினாலும் அது இலங்கை அரசாங்கத்தை குற்றவாளியாகக் கூண்டில் நிறுத்தும் என்று அமைச்சர்கள் பலரும் கூறிவருகின்றனர். அந்தளவுக்கு அவர்களிடம் தெளிவானதொரு நிலை காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் நழுவக் கூடும் என்பதையும் இந்த விசாரணைகளை பக்கச்சார்பானதாகக் காட்டுவதற்கு முயற்சிக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் அறியாததல்ல.


ஏற்கனவே, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான் கீ மூன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை என்று பலரும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரிக்க முற்பட்டதால், அவர்களும் விடுதலைப் புலிகளின் அனுதாபி என்றும் ஆதரவாளர் என்றும் அவர்களிடம் லஞ்சம் பெற்றவர்கள் என்றும் பெயர்களைச் சுமக்க வேண்டியதாயிற்று.

எனவே, இப்போது அமைக்கப்படும் விசாரணைக்குழுவும் அதுபோன்றே விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பது நவநீதம்பிள்ளைக்கோ, ஐ.நா. உயர் அதிகாரிகளுக்கோ தெரியாமலிருக்காது.

எனவேதான், இந்த விசாரணைகளிலிருந்து அதற்கு உதவும் பொறுப்பிலிருந்து இலங்கை அரசாங்கம் நழுவிக் கொள்ளாத வகையிலும் வெளிப்படையானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் அமைய வேண்டும் என்று நவநீதம் பிள்ளை கருதுவதாகத் தெரிகிறது.

அதனால், உலகளவில் நம்பிக்கைக்குரிய- இலங்கை அரசாங்கத்தினால் நிராகரிக்க முடியாத ஒருவரை இந்த விசாரணைக்குழுவின் தலைவராக நியமிக்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் முயற்சிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு நியமிக்க முயற்சிக்கும் நபர்களின் பட்டியலில் மிக முக்கியமானவராக இருப்பவர் ஐ.நாவின் முன்னாள் பொதுச் செயலர் கொபி அனான் என்று கூறப்படுகிறது. ஆனால், இவர் விசாரணைகளை மேற்கொள்வதில் முக்கியமானதொரு பிரச்சினை



யுள்ளது. அது என்னவென்றால், முன்னர் தனது தலைமையின் கீழ் பணியாற்றிய அதிகாரிகளிடமே இவர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியதொரு கௌரவப் பிரச்சினை இருக்கிறது.

மற்றப்படி, சர்வதேச அளவில் மதிப்புக்குரியவராக கருதப்படுபவரும் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவரும் என்பதால் கொபி அனான் தலைவராக நியமிக்கப்படுவதில் சர்ச்சைகள் ஏற்படாது.

ஆனால், கொபி அனான் விசாரணைக்குழுவின் தலைவராக இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் விசா வழங்குமா என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

அவர் சுற்றுலா விசாவில் வரலாம் என்றும் கூறிய அவர், ஐ.நாவின் விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காது என்றும் தெரிவித்திருந்தார்.

இதிலிருந்தே கொபி அனான் என்ன, வேறு யாராக இருந்தாலென்ன விசாரணைகள் என்று, இலங்கைக்கு வர முடியாது என்று மறைமுகமாக கூற முற்பட்டுள்ளது.

இன்னொரு பக்கத்தில், கொபி அனான் இன்னமும் ஐ.நா. விசாரணைக்குழுவில் இடம்பெறுவாரா என்பது பற்றிய அறிவிப்பு வெளியிடப்படாத நிலையிலேயே, அவருக்கு எதிரான கருத்துக்கள் சிங்கள ஊடகங்களில் வெளியாகத் தொடங்கி விட்டன.

2004 ஆம் ஆண்டு போர் நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த கௌசல்யன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு அப்போது ஐ.நா. பொதுச் செயலாளராக இருந்த கொபி அனான் இரங்கல் வெளியிட்டிருந்தார்.

அதனைச் சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகளுக்காக இரங்கல் வெளியிட்டவர், அவர்களின் அனுதாபி என்று சிங்கள ஊடகங்கள் காட்ட முனைந்துள்ளன. இதிலிருந்து இலங்கைக்கு எதிரான எந்த விசாரணைகளை மேற்கொள்பவராக இருந்தாலும், அவர் எத்தகைய உயர் மதிப்புக்குரியவராக இருந்தாலும், சிறுமைப் படுத்துவதும் புலி என்று பட்டம் கட்டுவதும் இங்கு வழக்கமானதொரு பாரம்பரியம் என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது.

இப்படியான நிலையில், கொபி அனானுக்கு அரசாங்கம் விசா கொடுத்து, செங்கம்பளம் விரித்து, விசாரணைகளை மேற்கொள்ள இடமளிக்கும் என்று நம்பமுடியவில்லை. ஒருவேளை அரசாங்கம், கொபி அனானையோ அல்லது விசாரணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படக்கூடிய எவரையோ நாட்டுக்குள் வருவதை நிராகரிக்க வழியில்லாத சூழல் ஏற்பட்டாலும் தனது கூட்டணியிலுள்ள கடும்போக்குவாதக் கட்சிகளின் உதவியுடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து அவர்களைத் தடுக்க முனையலாம்.

முன்னர், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ச உண்ணாவிரதம் இருந்ததை இங்கு நினைவிற்கொள்ளலாம். எவ்வாறாயினும் ஐ.நாவின் விசாரணைக்குழு அமைக்கப்பட்டதும், அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதா என்ற விவகாரத்தில் தொடங்கி அதன் இறுதி அறிக்கை வரையாக அரசாங்கத்துக்கு இனிச் சிக்கல்கள் தொடரப் போகின்றன.

அந்த அறிக்கை அரசாங்கத்துக்கு எதிராகவே அமையும் என்று அமைச்சர்களே கருத்து வெளியிடும் நிலையில் அது குறித்து அரசாங்கம் எத்தகைய பிரதிபலிப்பை வெளியிடும் என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

எனவே, அடுத்த சில நாட்களில் தொடங்கப்போகும் விசாரணைக்குழு நெருக்கடியிலிருந்து அரசாங்கத்தினால் இப்போதைக்குத் தப்பிக்க முடியாது. அடுத்து, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரத்திலும் இலங்கைக்கு அழுத்தங்கள் அதிகரிக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

(தொடரும்.....)

-சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் தொடர் கைது; மஹிந்தவின் உண்மை முகம் அம்பலமாகியுள்ளது

## முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் குற்றச்சாட்டு



**இந்தியாவிற்கு வருகை தந்து மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்று நல்லெண்ண அடையாளமாக மீனவர்களை விடுவிப்பதாகவும் கூறிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உண்மையான முகம் மீனவர்களின் தொடர் கைது மூலம் அம்பலமாகியுள்ளது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.**

ஈரோட்டில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை கடற்படையினரால் கடந்த 24 மணி நேரத்திற்குள் 131 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 53 மீனவர்களை இலங்கை கடற்படையினர் விடுவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை அதிகாலை 750 விசைப்படகுகளில் 900இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

தனுஷ்கோடி - தலைமன்னாருக்கு இடையே அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை படையினர் 45 மீனவர்களை கைது செய்தனர். எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

42 மீனவர்களும் மன்னார் கடற்படை முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலை யில் நேற்று முன் தினம் காலை நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மற்றும் நாகையைச் சேர்ந்த 32 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 8 விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், தலைமன்னார் பகுதியில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த 54 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தமாக 131 மீனவர்களும், 26 விசைப்படகுகளும் சிறைபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 53 மீனவரகளை இலங்கை கடற்படை யினர் விடுவித்துள்ளனர்.

எஞ்சிய 78 மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ள இலங்கை பொலிஸார் அவர்களிடம் தீவிர விசாரணை நட்த்தி வருகின்றனர்.

மன்னாரில் 42 மீனவர்களிடமும், யாழ்ப்பாணத்தில் 32 மீனவர்களிடமும் இலங்கை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த அத்துமீறலால் தமிழக மீனவரகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார். (2)

# கருணையுடன் ஆட்சி செய்யும் சர்வாதிகாரியே நாட்டுக்கு அவசியம்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

100 வீதமான ஜனநாயகம் சிறுபான்மை மக்களை ஒடுக்கிவிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

பூரணமாக சுதந்திரமானது சிறுபான்மை சமூகத்தின் கருத்துக்களை முடக்கிவிடக் கூடுமெனவும், பெரும்பான்மை சமூகத்தின் கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்த வழியமைக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டை கருணையான ஓர் சர்வாதிகாரி ஆட்சி செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பு இன்றி கருணையுடன் ஆட்சி செய்யக் கூடிய ஓர் சர்வாதிகாரியே நாட்டுக்கு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் தேர்தல் ஆணைக் குழுவிற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை 20 முதல் 25 ஆக வரையறுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசாங்கம் மெய்யாகவே மூன்றில் இரண்டு பெருமபான்மை பலத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கைகளின் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தாவியதாகவும், கட்சி தாவுவதனை தடுக்கக் கூடிய வகையிலான சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

# சாட்சியங்களின் விபரங்கள் வெளிப்படுத்தப்படமாட்டாது

## ஜனாதிபதி ஆணைக்குழு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் பகிரங்கமாக சாட்சியமளிக்க சாட்சிகள் தயங்கினால், இரகசியமாக சாட்சியமளிக்க வசதிகள் செய்யப்படுவதுடன், சாட்சியங்களின் விபரங்கள் ஒருபோதும் வெளிப்படுத்தப்படமாட்டாது என்று ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ.குணதாஸ தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் விசாரணைகள் பகிரங்கமாகவே நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் காணாமற் போனவர்கள பற்றிய விசாரணை ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாக இதுவரை எவ் விதமான முறைப்பாடுகளும் பதியப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

காணாமற் போனோர் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அமர்வுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கட்டங் கட்டமாக இடம்பெற்றுள்ளன.

ஆனால், அந்த விசாரணை அமர்வுகளில் பங்கு பற்றிச் சாட்சியம் அளித்த சாட்சிகள் எவரும், சாட்சியம் அளித்ததன் மூலம் தங்களுக்கு பிரச்சினைகளோ, அச்சுறுத்தல்களோ ஏற்பட்டதாக முறைப்பாடுகள் எதுவும் செய்திருக்கவில்லை என்றும் ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

சாட்சிகளை பாதுகாப்பதற்கான சட்டங்கள் எதுவும் இலங்கையில் இல்லாத நிலையில் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிப்பவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு தரப்பினாலும் அவ்வேப்போது கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் மிகவும் கெட்டுப் போச்சு சேர்; அந்தக் காலத்தில் எல்லாம் இது மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

இந்த உலகம் மிகவும் முன்னேறியிருக்கிறது சேர்; அடுத்த கிரகத்துக்கே போய் வீடு கட்டலாமா? என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே! என்று நினைப்பவர்களும் உண்டு.

அது சரி! உண்மையாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா?சற்று நிதானமாக யோசித்து பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வரவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாருங்கள் இராமகிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். ஒரு சிறிய கதை மூலமாக;

"உலகம் நல்லதா? கெட்டதா?" என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார். அதற்கு அந்தப் பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

அதற்கு நான் " பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒருகேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்" என்றார்.

" சரி கேளுங்கள்" என்றார் அவர்.

" பூனைக்குப் பல் இருக்கிறதே அது நல்லதா கெட்டதா?" என்று கேட்டார் இவர்.

இதைக்கேட்டதும் அவர் புலம்ப ஆரம்பித்தார்.

" என்னது? நம் உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திருப்பிக் கேட்கிறாரே! என்று யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன்பின் அந்தப் பெரியவர் அதற்கு விளக்கமளித்தார்.

"ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும்? யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரித் தான் பதில் வரும்"

பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனைக் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

" எங்கள் அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லால் தான் எங்கள் அம்மா என்னைக் கௌவித் தூக்கிக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு போவார். அது இல்லையென்றால் நான் இல்லை" என்று தான் குட்டிப் பூனை பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் கேளுங்கள். அது என்ன சொல்லும்?

"பல்லா அது எமன்! கடவுள் பூனையை படைத்ததோடு விட்டிருக்கக்கூடாதா? அதற்கு பல்லையும் எதற்குப் படைத்தார் குத்தூசி மாதிரி! அந்தப் பல்லின் கொடுமை என்னவென்பது கடிபடும் எனக்குத்தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி! எலி பார்க்கிற பார்வை ஒருமாதிரி.

அதேமாதிரித்தான் இந்த உலகம் நல்லதா -கெட்டதா என்று கேட்டால்..." இந்த உலகத்தின் தன்மையைக் பார்க்கின்றவர்களைப் பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரைக்கும் இதை நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள். கெட்டதென்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

எப்போதும் சந்தோசமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள். உங்கள் சந்தோசத்திற்கு என்ன காரணம்? என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண் டார்கள்.

" என் அத்தை மகள் என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோசமாக இருக்கிறேன்" என்றார் ஒருவர்.

" என்னுடைய அத்தை மகள் என்னை கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அது தான் நான் சந்தோசமாக இருக்கிறேன் என்றார் இன்னொருவர். இரண்டும் இரண்டு விதமான பார்வை!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராச்சி சர்வதேச விமான நிலையத்தில் தீவிரவாதிகள் துப்பாக்கித் தாக்குதல்

(கராச்சி)

பாகிஸ்தான் கராச்சி சர்வதேச விமான நிலையத்தினுள் புகுந்த தீவிரவாதிகள் அங்கு தாக்குதல் நடத்தியதில் 13 பாதுகாப்பு படையினர் பலியாகினர். பாதுகாப்பு படையினர் திருப்பி தாக்கியதில் 20 பேர் பலியாகினர்.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு கராச்சி விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இதுதொடர்பாகதெரியவருவதாவது, கராச்சிஜின்னாசர்வதேச விமான நிலையத்தின் பழைய முனையத்திற்குள் போலி அடையாள அட்டை காட்டி உள்ளே புகுந்த 15 தீவிர வாதிகள் அங்கு ரோந்து பணியில் இருந்த பாதுகாப்பு படையினரை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 13 பேர் பலியானார்கள். மேலும் கையெறி குண்டுகளையும் வீசி தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

விமான நிலையத்தில் கையெறி குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தீவிரவாதிகள் வெறியாட்டம் நடத்தினர்.

இதையடுத்து அங்கு வந்த பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் தீவிரவாதிகளுடன் சண்டையிட்டு விமான நிலையத்தை மீட்டனர்.

முன்னதாக சண்டையின் போது, விமான நிலையத்திற்கு வரும் அனைத்து வீதிகளும் சீல் வைக்கப்பட்டன. விமான நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று தங்கவைக்கப்பட்டனர்.





தீவிரவாதிகள் தாக்குதலையடுத்து கராச்சி விமான நிலையத்தில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. தாக்குதலையடுத்து கராச்சி சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

கடுமையான சோதனைக்கு பின்னர் தான் மீட்பு படையினர் விமான நிலையத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேவேளையில் விமான போக்குவரத்து முற்றிலும் அங்கு நிறுத்தப்பட்டு விட்டது. அங்கு வரும் அனைத்து விமானங்களும் மற்றொரு விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டிருக்கின்றன. இச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் பாதுகாப்பு படையினரிடம் பயணிகளை பத்திரமாக மீட்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (2)

# இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த சீனா விருப்பம்

## டில்லிக்கு வருகைதந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



(புதுடில்லி)

இரண்டு நாட்கள பயணமாக டில்லி வந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு திட்டங்கள் உட்பட பல்வேறு துறை களில இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து அப்போது அவர்கள் பேசினர்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பியாங்கின் சிறப்புத் தூதராக வந்துள்ள யீ, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார். தவிர மூத்த இந்திய அதிகாரிகளையும் அவர் சந்தித்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து விரிவாக பேச்சு நடத்தவுள்ளார்.

சீனாவில் மிகவும் பிரபலமான மோடி, பிரதமரானதைத் தொடர்ந்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கத்தில் சீன ஜனாதிபதி தனது சிறப்புத் தூதராக யீயை அனுப்பி வைத்துள்ளார்.

யாங் யீ, சுஷ்மா சுவராஜ் ஆகியோருடன் இரு நாடுகளின் வெளியுறவுத் துறை உயர் அதிகாரிகளும் இப்பேச்சுவார்த்தையின் போது உடனிருந்தனர். தனது கடல் பகுதிகளில், ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அச்சுறுத்தல் இருப்பதால், இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த சீனா விரும்புகிறது. இந்த பிரச்சினைக்கு இதன் மூலம் ஒரு தீர்வு கிடைக்கும் எனவும் சீனா நம்புகிறது.

இந்த பயணம் மிகச் சிறந்த அறிகுறியைக் காட்டுகிறது என்று வெளியுறவு கொள்கை நிபுணரான ரஞ்சித் குப்தா தெரிவித்தார்.

புதிதாக அமைந்துள்ள இந்திய அரசை, தாமாகவே முன்வந்து சீனா சந்திப்பது மிகச் சிறந்த நடவடிக்கையாகும் என்று அமெரிக்காவில் உள்ள யு.எஸ்.இந்திய மையத்தின் இந்திய பாதுகாப்பு ஆலோசனை குழுவின் உறுப்பினரான ரஞ்சித் குப்தா தெரிவித்தார்.

தற்போது இந்தியாவும், சீனாவும் உலகின் மிகப் பெரிய சக்திகளாக உருவாகிவருகின்றன. இந்நிலையில் சுமுகமான உறவின் மூலம் இந்தியா முன்னேற்றப் பாதையை அடைவதுடன், ஆசியாவின் மிகப் பெரிய சக்தியாக மீண்டும் விளங்கும் என்றார்.

### எல்லை பிரச்சினை

தனது தேர்தல் பிரசாரத்தின் போது, சீனா தனது ஆக்கிரமிப்பு கொள்கையை கைவிட வேண்டும் என்று மோடி பேசினார். அதற்கு பதிலளித்த சீனா, நாங்கள் எப்போதும் யாருடனும் போர் புரியவில்லை. எந்த நாட்டின் நிலத்தையும் ஆக்கிரமிக்கவில்லை என்று பதிலளித்தது.

இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லை சரியாக பிரிக்கப்படவில்லை. ஆனால், இது தொடர்பாக பல்வேறு அமைதி சாசனங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள, 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இரு நாடுகளும் தற்போதைய சீன வெளியுறவு அமைச்சர் பயணத்தின் போது பொருளாதார மேம்பாடு, எல்லை பிரச்சினை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### திபெத்தியர் ஆர்ப்பாட்டம்

சீன வெளியுறவு அமைச்சர் யாங் யீ வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், திபெத் விவகாரம் குறித்து சீனாவுடன் பிரதமர் நரேந்திர மோடி பேச வலியுறுத்தியும், டில்லியில் திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வடக்கு டில்லியின் மஜ்னு கா திலா பகுதியில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. சுமார் 100 பேர் கூடி கோஷமிட்டனர். பின்னர் அவர்களாகவே கலைந்து சென்று விட்டனர்.

இதனிடையே திபெத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட அரசு, இந்தியாவிலிருந்து செயற்படுகிறது. சீன அமைச்சரின் பயணத்தின்போது திபெத் பிரச்சினை குறித்தும் இந்தியா பேச வேண்டும் என்று நாடு கடத்தப்பட்ட திபெத் பிரதமர் லோப் சாங் சாங்கே கூறியுள்ளார்.

இந்தியா, சீனா இடையே திபெத் அமைந்துள்ளதால், இது குறித்து பேச்சு நடத்துவது இந்தியாவுக்கும் தேவையான ஒன்று என்று அவர் கூறினார். (2)

# தாய்லாந்தில் புரட்சியாளர்களை அடக்க பொலிஸ் தீவிர ரோந்து

தாய்லாந்தில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலை நிலவுவதால் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டில் அரசியல் கட்சிகள் பேரணி மற்றும் கூட்டங்கள் நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவியை நீதிமன்றம் பறித்ததைத் தொடர்ந்து பதவியேற்ற இடைக்கால அரசு செயல் இழந்தது.

இந்த நிலையில், நாட்டில் சட்டம் அமைதியை நிலை நிறுத்துவதாகக் கூறி இராணுவப் புரட்சி மூலம் அந்நாட்டு இராணுவ தளபதி பிரயுத் ஓசா ஆட்சியை கைப்பற்றினார்.

மேலும், தன்னை தாய்லாந்தின் பிரதமராக அறிவித்துக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் கிளர்ச்சியாளர்களால் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலை உருவானது.

இதனால், அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம், பேரணி, மறியல் போன்றவற்றில் ஈடுபட தடைவிதிக்கப்பட்டது.

இதனிடையே, கிளர்ச்சியாளர்கள் திடீர் போராட்டங்கள் மற்றும் மறியல்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு தற்போது தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து தலைநகர் பாங்கொக்கில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் போராட்டக்காரர்களை கண்டறிந்து கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டில் கிளர்ச்சியாளர்களால் போராட்டம் வெடிக்கும் என்று கருதப்படும் முக்கிய பகுதிகளில் 6 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளது என்றார். (2)

# காந்தி சிலையை உடைத்து சீக்கியர்கள் போராட்டம்

(லண்டன்)

லண்டனில் போராட்டம் நடத்திய சீக்கியர்கள் காந்தி சிலையை உடைத்து சேதப்படுத்தினர்.

கடந்த 1984ஆம் ஆண்டில் ஜூன் 8 ஆம் திகதி பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை வெளியேற்ற இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

'புளுஸ்பின் ஒபரேஷன்' எனப்படும் அதன் 30 ஆவது ஆண்டு நினைவு நாள் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் சீக்கியர்களால் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப் பட்டது.

அதையொட்டி இங்கிலாந்தில் வாழும் சீக்கியர்கள் லண்டனில் லெய்சர்ஸ் பகுதியில் உள்ள காந்தி சிலை முன்பு குவிந்தனர். அங்கு பொற்கோவிலில் நடத்தப்பட்ட இராணுவ தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து போராட்டம் நடத்தினர்.



1984 ஆம் ஆண்டு நடந்த இச் சம்பவத்தை ஒருபோதும் மறக்க மாட்டோம். எங்களுக்கு நீதி வேண்டும் என்பன போன்ற கோஷங்களை எழுப்பினர்.

போராட்டம் நடந்தபோது திடீரென ஆவேசம் அடைந்த சிலர் அங்கிருந்த வெண்கலத்தினால் ஆன காந்தி சிலையை அடித்து உடைத்து சேதப்படுத்தினர்.

இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து பொலிசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது ஒரு கிரிமினல் வழக்காக கருதப்படும் என்றும், இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து தகவல் தெரிவிக்கும படியும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இதற்கிடையே காந்தி சிலை உடைக்கப்பட்டதற்கு லெய்செல்பர் கிழக்கு எம்.பி. கெய்த் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த இழிச்செயலை ஒருவரோ அல்லது பலர் சேர்ந்து கும்பலாக செய்திருந்தாலோ அது முட்டாள் தனமானது. மேலும் கீழ்த்தரமானது. மனிதாபிமானமற்ற செயல்.

காந்தி இந்தியாவுக்கு மட்டுமின்றி லெஸ்செல்டருக்கும் பாரம்பரிய சொத்து ஆவார் என்றார். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களுக்கு உதவிகளை செய்ய தயாராக இருக்கின்றேன்



## முதலமைச்சருக்கு பசில் அழைப்பு



**வட மாகாண சபையின் முதலமைச்சர் என்னை சந்தித்தால் வடக்கு மக்களுக்கு அவர் சேவையாற்றுவதற்கான அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்க தயாராக இருக்கின்றேன். வடக்கு முதல்வர் அவரது மனச்சாட்சியின் படி மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும். அவர் என்னை விரைவில் சந்திப்பார் என நம்புகின்றேன் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

வட மாகாண சபை முதலமைச்சரை சந்திப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முயற்சித்து வருகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை மதித்து அந்த மக்களுக்கு சேவையாற்ற விக்னேஸ்வரன் முன்வரவேண்டும். அவருடன் ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தயவு செய்து எம்முடன் புரிந்துணர்வுடன் வேலை செய்யுங்கள் என்று வடக்கு முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். வடக்கு மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில் என்னை சந்திக்குமாறே நான் கேட்கின்றேன் என்றும் பசில் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு முதலமைச்சர் தமது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள் குறித்து பேசிக்கொண்டிருக்கின்றாரே தவிர மக்களுக்கு சேவையாற்றும் எண்ணத்தில் செயற்படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வட மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் வடக்கை மீள கட்டியெழுப்புவதற்கான வடக்கு செயலணி கலைக்கப்பட்டது. ஆனால் கடந்த எட்டு மாதங்களாக வடக்கில் மக்களுக்கு உரிய முறையில் சேவை யாற்றப்படவில்லை.

மாகாண சபைக்கு வருமானங்களை பெற்றுக்கொள்வதற்கான பல்வேறு சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு காணப்பட்டும் வடக்கு முதல்வர் அவற்றை செய்யாமல் இருக்கின்றார்.

எந்தவொரு மாகாண சபைக்கு வழங்காத 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை மத்திய அரசாங்கம் வடக்கு மாகாண சபைக்கு வழங்கியது. ஆனால் வடக்கு மாகாண நிர்வாகம் எதனையும் செய்யாமல் இருக்கின்றது. வடக்கில் தற்போதைய நிலைமையில் கல்வி, மின்சாரம், மீனவர் தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகள் செயலிழந்து காணப்படுகின்றன. புகையிரத பாதை நிர்மாணமும் வேகமிழந்து வருகின்றது.

யுத்தம் முடிந்த பின்னர் மத்திய அரசாங்கம் வடக்கு மாகாணத்தை பாரிய அளவில் முன்னேற்றியது. ஆனால் கடந்த எட்டு மாதங்களாக நிலைமை மாறிவிட்டது. இராணுவத்தை அகற்றுங்கள் என்று கூறுவதனை விட வேறு எதனையும் வடக்கு முதலமைச்சர் செய்வதில்லை.

வடக்கு மக்களுக்கு சேவை யாற்றவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். வடக்கு மக்கள் எங்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் எதனையும் செயயவில்லை. எனவே வட மாகாண சபையின் முதலமைச்சர் என்னை சந்தித்தால் வடக்கு மக்களுக்கு அவர் சேவையாற்றுவதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க தயாராக இருக்கின்றேன்.

வடக்கு மக்களுக்கு சேவை யாற்றுவது என்ற அடிப்படையில் முதலமைச்சருக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

நானும் வடக்கு முதலமைச்சரும் சந்திப்பதால் தனிப்பட்ட முறையில் எங்கள் இருவருக்கும் எதுவும் நடக்கப்போவதில்லை. எங்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது. ஆனால் வடக்கு மக்களுக்கு சேவையாற்ற முடியும். வடக்கு மக்களுக்கு சேவை யாற்றுவதாக கூறியே அவர் பதவிக்கு வந்துள்ளார். எனவே அந்த மக்களுக்கு சேவைய்ாற்றவேண்டியது அவசியமாகும். இதன் பின்னணியில் வடக்கு முதலமைச்சர் விரைவில் என்னை சந்திப்பார் என நம்புகின்றேன்.

வடக்கு மாகாண சபை அபிவிருத்தி செயற்பாட்டில் கடந்த எட்டு மாதங்களாக தோல்வியடைந்து விட்டது. அவ்வாறு முழுமையாக செயலிழந்துவிட்டால் அந்த் பழியை அரசாங்கத்தின் மீது சுமத்துவதே சிலரின் நோக்கமாகவுள்ளது.

எனவே தயவு செய்து எம்முடன் புரிந்துணர்வுடன் வேலை செய்யுங்கள் என்று வடக்கு முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். வடக்கு மக்களுக்கு சேவை யாற்றும் நோக்கில் என்னை சந்திக்குமாறே கேட்கின்றேன்.

யுத்தம் முடிவடைந்து 180 நாட்களில் அரசாங்கம் பல்வேறு முன்னேற்றங்களை வடக்கில் ஏற்படுத்தியது. ஆனால் கடந்த எட்டு மாதங்களாக வடக்கு மாகாண சபை நிர்வாகம் எதனையும் செய்யாமல் இருக்கின்றது என்றார். (2)

## பிரிவுத்துயர் பகிர்வு

### நடராஜா தம்பிமுத்து



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Krefeld ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தம்பிமுத்து கடந்த 4 ஆம்திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூத்வுடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Trauerhalle Friedhof Fischeln, Kolner StraBe 730, 47807, Fischeln, Krefeld, Germany என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.


### திருமதி குழந்தைவேலு பூமணி



கொம்மந்தறை கெருடாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு பூமணி கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மயிலிதனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.


### சிவஸ்ரீ. நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்(அத்தியடி பிள்ளையார் கோவில்- பிரதம குரு) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று திங்கட்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

### திருமதி துரைச்சாமி நாகம்மா



காரைநகர் சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி நாகம்மா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தச்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை



காரைநகர், அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு இல. 54/10,அம்மன் கோயில் வீதி,பண்டாரிக்குளம்,வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாதன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கிறேஸ்மேரி செல்வஜெயராணி செபரட்ணம்



இலங்கை பெந்தே கொஸ்த சபையைச் சேர்ந்த கிறேஸ்மேரி செல்வஜெயராணி செபரட்ணம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான்ார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று காலை 9.30 மண்ிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழையில் உள்ள குடும்ப சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### சின்னையா தணிகசபாபதி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தணிகசபாபதி கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Morden Assembly Hall, Tudor Drive, Morden, SM4 4PJ , Greater London என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# மண்டேலாவின் பெயரில் விருது வழங்க திட்டம்

## ஐ.நா. அறிவிப்பு



தென்னாபிரிக்காவில் நிற வேற்றுமைக்கு எதிராக போராடி மறைந்த பிரபல தலைவர் நெல்சன் மண்டேலாவின் பெயரை விருது ஒன்றிற்கு சூட்டுவதற்காக ஐ.நா. சபை திட்டமிட்டுள்ளது. இந்த தகவலை ஐ.நா. பொது செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு டிசெம்பர் மாதத்தல் மரணமடைந்த நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்காவில் பல காலங்களாக நிற வேற்றுமைக்கு எதிராக போராடி வந்தவர் ஆவார். சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 27 ஆண்டுகள் சிறை வாசத்திற்கு பின்பு விடுதலையான அவர் அந்நாட்டின் ஜனாதிபதியாய் பதவியேற்று, மக்களுக்காக பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

இந்நிலையில் உலக அமைதிக்காகவும், கறுப்பு இனத்தவர் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட அவர பெயரில், விருது ஒன்றை ஏற்படுத்திய ஐ.நா., அமைப்பு அதனை ஆண்டு தோறும் வழங்கவுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை செயற்பாடுகளுக்கு தடையாக இருப்பவர்கள் யார்?



## பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் அழைப்பு

**தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்துக்கான எங்களது பயணத்தின் போது பல்வேறு தியாகங்களை செய்து நாங்கள் பெற்றுக் கொண்ட பொன்னான வாய்ப்பான வடக்கு மாகாண சபை இன்று செயலிழந்து காணப்படுகின்றது.**

வடக்குமாகாணசபையின்செயற்பாடுகளுக்கு அரசாங்கம் தடையாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தொடர்ந்தும்கூறிவருகின்றனர்.

உண்மையில் இதற்கு அரசாங்கம் தடையாக இருப்பதாகக் கூற முடியாது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்குத் தடையாக இருப்பவர்கள் யார் என்பது பற்றி பகிரங்கமாக விவாதிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுவதாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாதெரிவித்துள்ளார்.

மல்லாவி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு கூடிய வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுடனான சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக மாகாண சபை இருக்கின்ற நிலையில் அதன் செயற்பாடுகள்இன்றுமுடக்கப்பட்டுள்ளன.

அதனை கைப்பற்றியிருக்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடாது என்கின்ற தங்களது சுயலாப அரசியல் இருப்பை நோக்கமாகக் கொண்டு மாகாண சபையை செயற்படுத்தாமல் காலம் கடத்தி வருகின்றது.

மாகாண சபை செயற்பாடுகளுக்கு தடையாக அரசாங்கம் இருக்கின்றது என அவர்கள் கூறி வருகின்ற நிலையில் அதுபற்றி பகிரங்கமான ஒரு விவாதத்தை பொது மக்களின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் முன்பாக நடத்துவதற்கு நாம் தயார் என்றும் அதில் கலந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா என்றும் வினவினார்.

எமது மக்களின் ஒளிமயமான எதிர்காலம் தான் தனது குறிக்கோள் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகல உரிமைகளையும் பெற்றவர்களாக நல்லதொரு வாழ்க்கையை எமது மக்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை அமைத் துக் கொடுக்கக் கூடிய நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் அதுவரையில் தனது செயற்பாடுகள் அயராது தொடருமெனத் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான சமரசப் போக்கினைப் முன்வைத்து எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கமுடியுமெனதான்நம்புவதாகவும் இதுவே நடைமுறை சாத்தியமான யதார்த்த வழிமுறை என சுட்டிக்காட்டிய அமைச்சர் அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டு எமது மக்களின் பிரச்சினைகளை எவ்வகையிலும் தீர்க்க முடியாது எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெறும் வீரவசனங்களை பேசிக் கொண்டிருக்காமல் குறைந்த பட்சம் அவர்கள் வசமுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபையின் ஊடாகவேனும் எமது மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது மல்லாவி பிரதான வீதி, ஆலயங்கள் புனரமைப்பு, மீள்குடியேற்ற உதவிகள், உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அம்மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் மக்களது கோரிக்கைகள் விரைவாகவும் படிப்படியாகவும் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்தார். (2)




# 50 வருட காலமாக திருத்தங்கள் நடைபெறாத கிரவல் துர்க்கா வீதி

## கவனத்தில் எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

கோம்பாவில் துர்க்கா வீதி புனரமைப்புசெய்யப்படாதுள்ளதாகஅப்பகுதி மக்கள்கவலை தெரிவித்துள் ளனர்.

கோம்பாவில் மற்றும் புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளின் எல்லையாகவுள்ள மேற்படி வீதியானது கடந்த 50 வருட காலத்திற்கு மேலாக திருத்தப்படாது, கிரவல் வீதியாகவேயுள்ளது.

அண்ணளவாக அறுநூறு மீற்றர் நீளமான குறித்த வீதியில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் குறித்த வீதியே புதுக் குடியிருப்பு செல்வதற்கு முக்கிய பாதையாக அமைந்துள்ளது.

இவ் வீதியானது கோம்பாவில் சந்தியில் புதுக்குடியிருப்புக்கான பிரதான வீதியுடன் இணைகிறது.

மேற்படிச் சந்தியிலுள்ள ஏனைய 3 வீதிகளும் கொங்கிறீட் பாதைகளாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இவ் வீதி மட்டும் இதுவரை கவனிப்பாரற்றுள்ளது.



புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான மேற்படி வீதியை திருத்தித்தருமாறு பலமுறை உரிய அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை காலமும் எதுவித திருத்த வேலைகளுக்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகம் குறித்த வீதியிலுள்ள தனியார் வீடு ஒன்றிலேயே தற்காலிகமாக இயங்கி வருவதையும் சுட்டிக்காட்டும் குறித்த பகுதி மக்கள் இவ்வாறான முக்கிய பாவனையிலுள்ள மேற்படி துர்க்கா வீதியை சிறந்த முறையில் திருத்தித் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

# கல்விப்பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப்படாமையால் வேலையில் தாமதம்

## முல்லை.கல்விச் சமூகம் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப் படாது காணப்படுவதாக முல்லைத் தீவு கல்விச் சமூகம்,கவலை தெரிவித்துள்ளது.

மேற்படி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனால் தற்போது குறித்த பதவி வெற்றிடத்திற்கு துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளரே தற் காலிகமாக பதில் கடமையாற்றி வரு கிறார்.

இதற்கமைய செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்கள் மட்டுமே இவர் முல்லைத்தீவு கல்வி வலயத் திற்குசமுகமளிக்கக்கூடியதாகவுள்ளது.

இதன்காரணமாக முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் புதுக் குடியிருப்பு, கரைதுறைப்பற்று மணலாறு (வெலிஓயா) ஆகிய 3 கோட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 57 பாடசாலைகளுக்கும் உரிய கால த்தில் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் இதுவரை நான்கு கல்விப் பணிப்பாளர்கள் முல்லைத் தீவு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் இவ்வாறான இடமாற்றங்களால இங்குள்ள பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் ஒரு காத்திரமான நடவடிக்கையை எடுப்பதில் சிரமம் ஏற்படுவதாக பெற்றோர் மற்றும்கல்வியியலாளர்களால்விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, வடமாகாண கல்வி அமைச்சு இதற்கு விரைந்து சிறந்த தீர்வைத் தர வேண்டும் என முல்லைத் தீவு கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத் துள்ளது. (2-267)


# வவு.மாநகர சபை ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி கவனயீர்ப்பு போராட்டம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபை சுகாதார ஊழியர்கள் ஏழு பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வவுனியா நகரசபை முன்னால் உள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியடியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் கவனயீர்பபு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்ட்து.



வவுனியா சுகாதார ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதனைத் தொடர்ந்து 61 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 7 பேருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கும் விரைவாக நியமனம் வழங்கப்படும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளிட்ட பலரும் உறுதியளித்த போதும் அவர்களுக்கு இன்று வரை நியமனம் வழங்கப்படாததுடன் அவர்களை வேலையில் இருந்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, 2001 ஆம் முதல் சுகாதார ஊழியர்களாக பணியாற்றிய தமக்கும் நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி பாதிக்கப்பட்டவர்களில் 5 பேர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் சுகாதார ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதி ஆர்.சந்திரன் தெரிவிக்கையில்,

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் சுகாதார ஊழியர்களாக பணியாற்றி வந்த ஏழு பேருக்கு நியமனம் வழங்குவதாக பலரும் உறுதியளித்த நிலையில் அவர்களுக்கு இன்று வரை நியமனம் வழங்கப்படாது செய்த வேலையில் இருந்தும் நிறுத்தியுள்ளனர்.

இதனால் அவர்கள் வருமானம் இன்றி பாதிப்படைந்துள்ளதுடன் கடன் மற்றும் வறுமை காரணமாக அவர்களில் இருவர் காணாமற் போயுள்ளனர்.

ஏனையவர்களுக்கும் இந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்கு இவர்களின் நிலையை கருத்தில் கொண்டு நியமனம் வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை முன்னாள் உபதலைவர் சந்திரகுலசிங்கம், வவுனியா வெண்கல செட்டிகுள பிரதேச சபை உறுப்பினர் சிவம், மாக்சிச லெனின் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பிரதீபன் ஆகியோர் சென்று கலந்துரையாடலை மேற்கொண்ட போதும் அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சட்ட நடவடிக்கையை விடுத்து வேள்வி செய்வோரைச் சந்தியுங்கள்

வேள்வியைத் தடுப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்திகள் வெளிவந்துள்ளன.

சட்ட நடவடிக்கை மூலமாக வேள்வியைத் தடுக்க முடியுமாயினும் அதனால் மக்களின் மனங்களை வெல்ல முடியும் என்று ஒருபோதும் கூறமுடியாது.

வேள்வி என்பது ஒரு வகையான நம்பிக்கையோடு நடத்தப்படுகின்றது. அந்த நம்பிக்கைகளைத் தெளிவுபடுத்துவதே இங்கு முதன்மையான விடயமாகும்.

உண்மையான நம்பிக்கைகளை தமது வியாபார நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் பலரும் முற்படுகின்றனர். இதன் காரணமாகவே வேள்வி உசார் கொள்கிறது. ஒரு சம்பவம் மக்கள் மத்தியில் உசார் அடையுமாயின் அதனைச் சட்டத்தால் நிறுத்துவதென்பது ஒரு போதும் முடியாத காரியமாகும்.

இதையும் மீறி சட்டம் தடுக்க முற்படுமாயின் அதன் முடிபுகள் அனைவரையும் கவலை கொள்ளச் செய்து விடும். அதேநேரம் வேள்வியைத் தடுக்க வேண்டும் என்று நினைப்பதும் அதனை நிறைவேற்றுவதும் மிகவும் முக்கியமான விடயம்.

அதற்காகப் பொருத்தமற்ற அணுகுமுறைகளைக் கையாள்வது வேள்வி செய்வோரையும் அதனைத் தடுப்போரையும் முரண்பாடடையச் செய்யும். எங்கள் வேள்வியைத் தடுப்பது யார் பார்க்கலாம் என்றொரு குரலொலி எழுமாயின் அதன் முடிபு விபரீதமானதாக இருக்கும் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

ஏனவே, எதனையும் ஒரு சுமுகமான அணுகு முறையின் ஊடாகச் சந்திப்பதும், எதிர்கொள்வதுமே புத்திசாலித்தனமாகும். அந்த வகையில் வேள்வி செய்வோர் மற்றும் வேள்வி நடைபெறும் ஆலயத்தின் அறங்காவலர்கள், ஊர்ப் பெரியவர்கள் எனப் பலரையும் அழைத்து அவர்களோடு பேச வேண்டும்.

கொல்லாமை எனும் பெரும் அறம் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

இது விடயத்தில் சமயத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து ஓரங்கமாகச் செயற்படுவது அவசியம்.

அதிலும் வேள்வி செய்கின்றவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் இங்கு முக்கிய இலக்கினராவர். ஒவ்வொரு இளைஞர்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுமாயின், வேள்வியை நிறுத்துவது மிகவும் சுலபமாகி விடும்.

வேள்வி செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற தந்தைக்கு அப்பா! உயிர்ப்பலி வேண்டாம் என்று அவரின் மகன் கூற வேண்டும். அவ்வாறு கூறக்கூடியதான இளைஞர் அமைப்பை உருவாக்கி அவர்களை இயங்குசக்தியாக மாற்ற வேண்டும். அதுவே வேள்வியைத் தடுக்கும் ஆயுதமாகும்.

இளைஞர்களும் மாணவர்களும் ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வார்களாயின் அந்தக் கருத்தே சமுதாயத்தின் அங்கீகாரத்திற்கு உட்படும்.

எனவே வேள்வியைத்தடுக்க சட்ட நடவடிக்கை எடுத்தல் என்ற அணுகுமுறையை விடுத்து, வேள்வி செய்கின்றவர்கள் மத்தியில் உயிர்ப்பலியைக் கைவிடுவோம் என்ற தொனிப் பொருளை விதைப்போம். அந்த விதைப்பு வேள்வியை நிறுத்த வேண்டும் என்ற இலக்கை நிச்சயம் அடையும்.

ஆகையால்; அன்பு, அரவணைப்பு, சமத்துவம் என்ற கருவிகளின் ஊடாக வேள்வியை நிறுத்தும் பணியைத் தொடர்வோம்.

# ஆளுநர்களாக படை அதிகாரிகள் வடக்குக் கிழக்குக்கு மட்டும் ஏன்?

## அமைச்சர் ஹக்கீம் கேள்வி

(கண்டி)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் முன்னாள் படையதிகாரிகளும், தெற்கில் சிவில் ஆளுநர்களும் நியமிக்கப்படுவதற்கான காரணம் புரியவில்லை.

ஒரு கரத்தில் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தை வழங்கி மறு கரத்தில் அதனை வாங்கிக் கொள்வதாகவே இந்த நடவடிக்கை கருதப்பட வேண்டும்.

முன்னாள் படையதிகாரிகள் வடக்கு கிழக்கில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டதன் காரணமாகவே அந்தந்த மாகாணசபை முதலமைச்சர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

தெற்கில் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்படவில்லை. இதனால் எவ்விதமான பிரச்சினைகளையும் முதலமைச்சர்கள் எதிர்நோக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி, யட்டிநுவர பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

## பாக்.இல் தாக்குதல் இலங்கை கண்டனம்

(கொழும்பு)

பாகிஸ்தான், கராச்சி ஜின்னா விமான நிலையத்தில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாகிஸ்தானின் சர்வதேச விமான சேவைகள், உட்கட்டமைப்பு மற்றும் வணிகம் போன்றவற்றை சீர்குலைக்கவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் முயற்சியை முறியடித்தமையானது, பாகிஸ்தான் படையினரின் தொழில் கடமையாகும்.

இந்த சம்பவம், பயங்கரவாதத்தை எதிர்த்து போராட வேண்டிய அவசர தேவையை சர்வதேசத்திற்கு நிரூபிக்கின்றது.

இலங்கை அரசாங்கம் இத்தாக்குதலில் உயிரிழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## பாப்பாண்டவர் ஜனவரியில் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பாப்பாண்டவர் முதலாம் பிரான்சிஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி முதல் 15-ம் திகதி வரையில் பாப்பாண்டவர் இலங்கையில் தங்கியிருப்பார் என அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜனவரி மாதத்தில் பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் பற்றிய திகதிகள் உள்ளிட்ட தகவல்களை கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டுள்ளார்.

ஜனவரி மாதத்தில் பாப்பாண்டவர் பிலிப்பைன்ஸிற்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## பட்டி மன்றங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பட்டிமன்றக் குழுவின்ர் வழங்கும் சிறப்பு பட்டிமன்றம் எதிர்வரும் 13,14 ஆகிய இரு திகதிகளில் சாவகச்சேரி, அளவெட்டி ஆகிய இடங்களில் பண்டிதர் பொன் சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது என யாழ்.பட்டிமன்றக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நுணாவில் மருதடி விநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இன்றைய குடும்பங்களில் பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் உறவினர்களா? அயலவர்களா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை அளவெட்டி கும்பிளாவளைப்பிள்ளையார் ஆலய பூங்காவனத் திருவிழா நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 7.30 மணிக்கு இன்றைய அறிவியல் வளர்ச்சி ஆக்கத்தை செய்கின்றதா? அழிவை செய்கின்றதா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள அனைவரும் இப்பட்டிமன்றங்களில் கலந்து கொள்ளுமாறு யாழ். பட்டிமன்றக் குழுவினர் அறிவித்துள்ளனர். (2-6)

## மயக்க மருந்து தெளித்து தங்க நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்தவர்களுக்கு மயக்க மருந்து தெளித்துவிட்டு 10 பவுண் தங்கநகைகள் கடந்த கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருடப்பட்டுள்ளது என்று அவ்வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது வீட்டினுள் உள்நுழைந்தவர்கள் அனைவர் மீதும் மயக்க மருந்து தெளித்து விட்டு நகைகளை திருடியுள்ளனர். மறுநாள் காலை அவர்கள் எழுந்து பார்த்த போதே, நகைகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-6)

## மாடு கொண்டு சென்ற இருவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி 03 பசுமாடுகளை சிறிய ரக உழவு இயந்திரமொன்றில் கொண்டு சென்றதாகக் கூறப்படும் இருவரை மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்தார்.

அத்துடன், மீட்கப்பட்ட 03 பசுமாடுகளையும் பொலிஸாரின் பராமரிப்பில் வளர்க்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

புத்தூர், ஊரெழு பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இருவரும் வாதரவத்தையிலிருந்து சுன்னாகத்துக்கு பசுமாடுகளை கொண்டு சென்ற போது, யாழ்நிலாவரைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)


## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய ஒன்பதாம் திருவிழா இன்று

நீராவிக் குளக்கரையான் திருநாள் ஒன்பது
பெரிய சப்பறம்



அனைத்தும் தம்முட்தான்
அடக்கமென்று
அர்ஜுனற்கு அன்று காட்டிய
அம்மானார்
அன்பிற்குள்தான் அடக்கம் என்று
நம்பிக்கையூட்டி
தும்பிக்கையைக் காட்டிக்காட்டுகின்றான்
விஷ்வரூபம்! இன்று
கஜவதனகுஹராஜனார்


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### உண்மையான இன்பம்



- ஆன்மீக வழியில் தேடும் இன்பமே உண்மையான இன்பம்.
- கடவுள் நம்மோடு எப்போதும் இருக்கிறார். ஆனால், நம் கண்ணுக்கு புலனாவதில்லை.
- குறிக்கோளுக்குரிய முக்கியத்துவத்தை, அதை அடையும் பாதைக்கும் கொடுங்கள்.
- எதையும் கைம்மாறு கருதாமல் செய்ய முயலுங்கள். பயன் கருதி செய்யும் எதுவும் உதவியாகாது.
- கண்ணில் காணும் அனைத்தையும் கடவுளின் அம்சமாகவே போற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி; வலிகாம பாடசாலைகள் ஆதிக்கம்



















வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் 2 முதலிடங்கள் 2 இரண்டாமிடங்கள் மற்றும் 2 மூன்றாமிடங்கள் பெற்று யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 5 கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

முதலாம், இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முடிவுற்ற நிலையில் மூன்றாம் கட்டப் போட்டிகள் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டிகள் ஓமந்தை மத்திய கல்லூரியில் கடந்த புதன்கிழமை முதல் இடம்பெற்று வியாழக்கிழமை வரை இறுதிப்போட்டிகள் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் (வலிகாமம்) மோதின. போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகள் பெற்றன.

எனினும் இறுதி நேரத்தில் அபாரமாக ஆடிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 12:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் அணி 18:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் ஆண்டாங்குளம் மகா வித்தியாலயத்தினை வீழ்த்தியது.

17 வயதுப்பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலய அணியினை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர தரப் பாடசாலை அணி மோதியது. இதில் அபாரமாக ஆடிய அராலி சரஸ்வதி அணி 24:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியா அணி 27:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் புனித ஜோசப் வித்தியாலயத்தினை வீழ்த்தியது.

19 வயதுப்பிரிவினருக்கிடையிலான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 28:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி 29:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணியினை வீழ்த்தியது. (க)

## ஜொலிஸ்ராரை வென்றது தெல்லிப்பழை யூனியன்




ஜே..பி எல் பருவகாலம் 2இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி இலகுவாக 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் மணிவண்ணன் 52 ஓட்டங்களையும் மதுஷன் 22 ஓட்டங்களையும் சைலேஷ்வரன் 10 ஓட்டங்களையும் ருக்ஷமன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

உதிரிகளாக 24 ஓட்டங்கள் கிடைத்தன. ஏனையோர் இரட்டை இலக்கங்களைக் கூட எட்டவில்லை.

பந்துவீச்சில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியின் [illegible] 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிரஷாந்தன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ரகுபதி மற்றும் தயாளன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 146 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 13.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஜென்ஷன் 36 பந்துகளில் 46 ஓட்டங்களையும், ஆகீசன் 36 பந்துகளில் 65 ஓட்டங்களையும், சுஜந்தன் 10 ஓட்டங்களையும் தயாளன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் மதுஷன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிருஜன் மற்றும் மணிவண்ணன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக 65 ஓட்டங்களைக் குவித்த தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழக அணியின் ஆகீசன் தெரிவானார். (க-23)

## ஜனசக்தி ச.ச.நிலைய விளையாட்டு விழா

நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள ஜனசக்தி சனசமுக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். மாவட்ட ரீதியான ஆண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டமும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.மாவட்ட ரீதியான 50 மைல் ஆண் களுக்கான சைக்கிள் ஓட்டமும் நடைபெறவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை ரசிகர்கள் எங்கள் பலம்-டோனி



சென்னையில் மருத்துவமனை திறப்பு விழாவில் பங்கேற்ற தோனி, சென்னை ரசிகர்கள்தான் எங்கள் பலமாக விளங்குகின்றனர் என கூறியுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அணித் தலைவராக அசத்திய தோனிக்கு சென்னையில் அதிக ரசிகர்கள் உள்ளனர்.

இது குறித்து அவர் கூறுகையில்,

இந்த சீசனில் எனக்குப் பிடித்த சென்னைக்கு இது என்னுடைய முதல்வருகை. இந்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகள் இங்கு நடை பெறவில்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

ஆனாலும் சென்னையின் எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவு எங்கள் பக்கம் இருந்தது. அவர்கள் தான் எங்கள் பலமாக இருக்கிறார்கள்.

மேலும் நான் திறப்பு விழாவுக்கு வந்துள்ள இந்த மருத்துவமனை நிறைய நோயாளிகளுடன் சிறப்புற விளங்க வேண்டும் என்று என்னால் வாழ்த்த முடியாது.

ஆனால் யார் இங்கு வந்தாலும் சிறந்த சிகிச்சை பெறுவார்கள் என்று கூறக்கடமைப்பட்டிருக்கிறேன் என்று கிண்டல் கலந்த பேச்சாக கூறியுள்ளார் (க)

# மோதல்களில் பாலியல் வன்முறையை தடுக்கும் மாநாட்டில் இலங்கை இல்லை

(லண்டன்)

மோதல்களின் போது பாலியல் வன்முறைகள் நடப்பதை தடுக்கும் நோக்குடன் நடத்தப்படும் உலகளாவியமாநாடு லண்டனில் இன்று தொடங்குகிறது.

இந்த நான்கு நாள் மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் மற்றும் ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் சிறப்புத் தூதரான ஹாலிவூட் நடிகை ஏஞ்சலீனா ஜோலி ஆகியோரின் இணைத் தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டில் இலங்கை கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்தின் துணைத் தூதர் நெவில் டி சில்வா கூறினார்.

மோதல்களின்போது பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரகடனத்தை அங்கீகரிக்கும் நாடுகளை மட்டுமே மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பிதழ் விடுக்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

நாங்கள் மாநாட்டில் பங்குபற்ற விரும்பினோம். ஆனால், பிரகடனத்தை அங்கீகரிக்காத நிலையில் எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது என்றார் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கையின் துணைத்தூதர் நெவில் டி சில்வா.

மோதல்களின்போது பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரகடனத்தை இலங்கை மட்டுமன்றி, ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் அங்கீகரிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரகடனத்தை இலங்கை ஏன் அங்கீகரிக்கவில்லை என்பதற்கான விளக்கத்தையும் அளிக்க அவர் மறுத்துவிட்டார்.

லண்டன் எக்ஸல் மண்டபத்தில் இன்று ஜூன் 10-ம் திகதி முதல் 13-ம திகதி வரையான காலத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடே, மோதல்களில் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான மிகப்பெரிய மாநாடாக அமையவுள்ளது.

மோதல்களில் பாலியல் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஐ.நா பிரகடனத்தை அங்கீகரித்துள்ள எல்லா அரசாங்கங்களும் சட்டத்துறை, நீதித்துறை மற்றும் இராணுவ தொழிற்சார் நிபுணர்களும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டின் பிரகடனத்தின் மூலம் அளிக்கப்படுகின்ற உறுதி மொழிகளை பெண்கள், சிறார்கள் மற்றும் ஆண்களை பாலியல் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளாக மாற்றுவதே மாநாட்டின் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது (எ-11)

## கருத்துக்...

மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது நியாயமானதா என்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரப்படவுள்ளது.

போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விசாரணை நடத்த உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர நவநீதம்பிள்ளை இந்த விசாரணைக் குழுவினை இன்று பெயரிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணைக்குழு அமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரகளின் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (எ-11)

## ஐ.நா...

பிள்ளை வெளியிடவுள்ளார்.

அத்துடன், இந்த விசாரணைக் குழு தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் இந்தக் கூட்டத்தொடரில் வெளியிடப்படவுள்ளது.

இதனை ஜெனிவாவில் உள்ள தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மீதான விசாரணைகளை மேற் கொள்வதற்கான ஐ.நா விசாரணைக் குழுவின் தலைவராக நியூசிலாந்தைச் சேர்ந்த முன்னாள பெண் நீதிபதி டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையாரும், இணைப்பாளராக மனிதவுரிமைகள் தொடர்பிலான நிபுணர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையாரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆதாரங்கள்...

இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான 2-வது அமர்வு திங்கட்கிழமையுடன் முடிவடைந்தது.

ஆனாலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அமர்வுகள் முற்றுப்பெறவில்லை என ஆணைக்குழுவின் தலைவரான பராக்கிரம பரணகம விசாரணை முடிவில் செய்தியாளர்களிடம் கூறினார்.

1990-ம் ஆண்டு குருக்கள்மடம் என்னுமிடத்தில் 167 முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம்களினால் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதில் அளித்த அவர், சாட்சிகள் இல்லாமல் சட்டத்தை இயக்க முடியாது என்றார்.

சில உடல்கள் அங்கு புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதனை மட்டும் வைத்துக் கொண்டு விசாரணை மேற்கொள்ள முடியாது. சரியான ஆதாரங்களுடன் தான் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வெறும் வாய் மூல சாட்சியங்களை வைத்துக் கொண்டு செய்ய முடியாது என்று அவர் பதிலளித்தார்.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களில் நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வுகளின்போது 195 சாட்சிகள் ஆணைக்குழு முன்னிலையில் தோன்றி சாட்சி அளித்தனர். புதிதாக 202 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆரையம்பதி பிரதேச செயலக மண்டபத்தில் இறுதி நாட்கள் நடைபெற்ற விசாரணைகளின்போது 94 பேர் சாட்சியமளித்தார்கள். இதில் இரண்டு பேர் முஸ்லிம்கள், ஏனையோர் தமிழர்கள்.

இந்த பிரதேசத்தில் ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் மற்றும் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விடுதலைப்புலிகள், இராணுவம் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கட்சிகளில் ஒன்றான ரெலோ ஆகியவை மீது சந்தேகங்களை தெரிவிக்கும் வகையில் பலரது சாட்சியங்கள் அமைந்திருந்தன.

தமிழ்-முஸ்லிம் வன்முறைகளின்போது தமிழர்கள் காணாமல் போன சம்பவங்கள் மற்றும் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் சிலரது சாட்சியங்கள் நேரடியாகவே முஸ்லிம்களை தொடர்புபடுத்துவதாக இருந்தது. (எ-11)

## சொல்ஹெய்ம்...

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முனைப்புக்கள் எவ்வாறு தோல்வியடைந்தது என்பது பற்றி வேண்டுமாயின் சொல்ஹெய்ம் விபரிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009-ம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி சொல்ஹெய்மிற்கு எதுவும் தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிக் சொல்ஹெய்மின் சாட்சியத்தை சர்வதேச நிறுவனம் ஏற்றுக் கொண்டால் அதன் மூலமே, சர்வதேச விசாரணைகள் தவறானது என்பது புலனாகும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இந்திய...

களும் விரைவில்விடுதலைசெய்யப்படுவார்கள் என்று எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தமது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு மற்றும் தலைமன்னார் கடற்பரப்பிலும் கைதுசெய்யப்பட்ட 82 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ள நிலையில், அந்த மீனவர்களை விடுதலை செய்வது பற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் டுவிட்டர் மூலமான அறிவித்தல் வெளியாகியிருக்கிறது.

நெடுந்தீவு கடற்பரப்பில் 36 மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் 46 மீனவர்களும் கைது செய்யப்பட்டு அவர்கள் ஊர்காவற்றுறைமற்றும் மன்னார் மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 32 இந்திய...

கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் நேற்றைய தினம் யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

32 இந்திய மீனவர்களும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக் களத்தினரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதவான் எஸ். லெனின்குமார், இந்திய மீனவர்கள 32 பேரினையும் எதிர்வரும் 20-ம திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-4)

## பொங்கல்...

டிப்பரினுள் சிக்கியது. உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் இரண்டு வாகனங்களின் சாரதிகளையும் கைது செய்ததுடன் சடலங்களை கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-6,15,259)

## வியட்நாம்...

தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே வியட்நாம் தூதுவர் முதலமைச்சரிடம் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்றுக் காலை 11.30 மணியளவில் சோஷலிச குடியரசாகிய வியட்நாமின் தூதுவர் டோன் சின் தான்ங், முதலமைச்சர் வாசஸ்தலத்தில் தமது அலுவலர் புங் ட்ரொங் துவான் என்பவருடன் வந்து அவரைச் சந்தித்தார்.

தம் நாட்டினால் வழிநடத்தப்படும் நீர்வாழ் உயிர் சம்பந்தமான வியட்நாம் தொழில்நுட்ப உதவித் திட்டம் என்ன விதத்தில் கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைப் பார்வையிடத் தாங்கள் வந்ததாகக் கூறினார்கள்.

நாட்டின் பல பாகங்களிலும் பரிசீலனை செய்ததில் வட மாகாணமே நீர் வாழ் உயிரினங்களை வளர்த்தெடுக்குந் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான இடம் என்பது கண்டு இங்கு எம் மாகாணத்தில் தொழில்நுட்பப் பயிற்சிகளையும் பாடங்களையும் கொடுத்து வருவதாகக் கூறினார்.

பட்டம் பெற்ற இரு வாலிபர்களைத் தம் நாட்டுக்கழைத்து அங்கு தமது தொழிற்சாலைகளைப் பார்வையிடவும் பயிற்சி பெறவும் உதவியதாகக் கூறினார். அவர்கள் இங்கு வந்து தொடங்கியுள்ள வழிகாட்டல் ஆரம்பத் திட்டமானது ஏற்கெனவே வெற்றி கண்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

உள்நாட்டு நீர் நிலைகள் எங்கள் வட மாகாண சபையின் அதிகாரத்தினுள் வருவதால் மேலும் மேலும் இப்பேர்ப்பட்ட நீர் வாழ் உயிரின இனப்பெருக்கத்திற்கான விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்தால் காலாகாலத்தில் உள்ளூர் நீர் நிலைகளில் பெருகி வரும் உயிரினங்களை, மீன்களை, கடலட்டைகளை. காணிப் பாசிகளை எல்லாம் நல்ல விலைக்கு சீனா, யப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றுரைத்தார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் போரினால் பாதிக்கப்பட்டு எதுவுமே இல்லாத ஒரு நிலையில் இருந்த வியட்நாம் இன்று பல இலட்ச டாலர்களுக்கு மீன் ஏற்றுமதி செய்வதாகவும் தமது நாடு பொருளாதார ரீதியாக மேம்பட்டு வருவதாகவும் அறிவித்தார்.

மேற்படி தொழில்நுட்பப் பயிற்சி முறைகளின் வெற்றிக்கு வித்திடும் விதத்தில் தாம் தொடர்ந்து எமக்குப் போதிய உதவிகளை வழங்கப் போவதாகவும் அறிவித்தார்.

இதன்பின் ஆளுநரைச் சந்தித்து அதன்பின் வேலைத்திட்டம் நடைபெறும் பிரதேசங்களைப் பார்வையிடப் போவதாக அறிவித்துச் சென்றார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (எ-4,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றொணாத் துயரத்தில் ஐந்தாண்டுகள்



## அமரர் புற்குணம் சதீஸ்குமார்

(Diploma In Nursing) தாதியர் உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

திதி : வளர்பிறை துவாதசி (10.06.2014)

தோற்றம் :- 08.10.1976
மறைவு :- 04.06.2009

நற்பல குணம் கொண்டவனாய்
நானிலம் போற்ற வாழ்ந்தவனே சதீஸா
சுக நலமாய் தாய்த்தமிழ் உறவிருக்க
தாதியத் துறைக்கென்றுழைத்தவனே !
சிரித்த முகம் கொண்டு உன் உறவுகள் இருந்தவேளை
அவர் முகத்தை கண்ணீர் கொண்டு நனைத்ததேனோ?
உன்னுழைப்பால் மக்கள் பாரம் கூடுமென்று
பாரினின்று பாதியில் பிரித்து சென்றானோ இயம தர்மன்
புரியவில்லை சதீஸா எமக்கு !
இருந்த போதும் பிரார்த்திக்கிறோம்
சிறுப்புலக் குமரனை உன் ஆத்ம சாந்திக்காய்.



பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

(6727)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் தென்மேல் பருவக்காற்று மணித்தியாலத்துக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதால் கடற்கரையோரங்களில் உள்ளவர்களும் மீனவர்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல்2 மணிவரையான 24 மணித்தியாலங்களில் இந்த காற்று பலமாக வசும் எனவும் குறித்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புக்களில் அலைகளின் சீற்றம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் மீனவர்களை அவதானமாகச் செயற்படுமாறு வானிலை அவதான நிலையம் கோரியுள்ளது. (எ-11)

## MOBILE PHONE REPAIRING COURSE

(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

*நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?*

**4 days course**

புதுப்பொலிவுடன் யாழ்நகரில உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.

திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாண வர்களைஉருவாக்கிய முதற்தர ஆசிரியருமான **Ganesh.K.**

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம் பாதிக்கமுடியும். நவீன **Mobile Phone Repairing** முறைகள் பயிற்றுவிக்கப்படும.

**BTEC**
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE

#21, Sirampiyadi lane
Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225

(C-7612)

# கண்ணீர் அஞ்சலி

## சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்

(பிரதமகுரு யாழ் / அத்தியடி பிள்ளையார் கோயில்,
தியாகி அறக்கொடை ஞான வைரவர் கோயில்.

எமது ஆலய பிரதம குருவும், சொர்ணாம்பிகை மண்டப திருமணக் குருக்களுமாகிய சிவஸ்ரீ ந.கணேசராஜக் குருக்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் பெரு வேதனையும் அடைந்துள்ளோம்.

அவரது ஆத்ம சாந்திக்காகவும் குடும்பத்தினரின் மன அமைதிக்காகவும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.

ஸ்தாபகர்,
பணிப்பாளர், பணியாளர்கள்,
தியாகி அறக்கொடை நிறுவனம் (TCT)

(C-7614)

விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்

# பார்த்தீனியம் கொள்வனவு



## 1 கிலோ பார்த்தீனியத்துக்கு 10 ரூபா

வடமாகாண சுற்றுக்சூழல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு கிலோ பார்த்தீனியத்துக்கு 10 ரூபா என்ற விகிதத்தில் ஊக்குவிப்பு நிதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**11.06.2014 தொடக்கம் 17.06.2014 வரை**

**தினமும் பிற்பகல் 3.00 தொடக்கம் 6.00 மணி வரை**
**பின்வரும் இடங்களில் பார்த்தீனியம் கொள்வனவு செய்யப்படும்.**

- எல்லாளன் சனசமூக நிலையம் – புத்தூர்
- வளர்மதி சனசமூக நிலையம் – சுன்னாகம் வீதி, புத்தூர்
- சுடலையடி – சிறுப்பிட்டி மேற்கு
- மலர்மதி சனசமூக நிலையம் – அச்செழு
- கைத்தொழில் பேட்டை – அச்சுவேலி மேற்கு
- குட்டியப்புலம் பொதுநோக்கு மண்டபம் – வயாவிளான்
- ஏழாலை கிழக்கு சனசமூக நிலையம் – ஏழாலை சந்தி (சைவ மகாஜனா அருகில்)
- யாழ்ப்பாணக் கல்லூரி பஸ் நிலையம் – வட்டு யாழ். வீதி, வட்டுக்கோட்டை
- பிரதேச சபை பொது மண்டபம் – கைதடி கிழக்கு
- குமரகோட்டம் சனசமூக நிலையம் – கோண்டாவில்
- பானாவெட்டி அம்மன் கோவில் – மாதகல்
- கிருஷ்ணன் கோவில் – உடுப்பிட்டி வல்லை நாற்சந்தி

பாதுகாப்பாக உரப்பைகளில் இட்டு பிற செடிகளுடன் கலக்காது எடுத்துவரப்படும் பார்த்தீனியம் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும். ஒப்படைக்கும் உரப்பைகளுக்கு மாற்று உரப்பைகளை பார்த்தினீயம் கொள்வனவு செய்யப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்

செயலாளர்,
விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்.

(C-7615)

**படையெடுக்கும் பார்த்தீனியத்துக்கு விடைகொடுப்போம் வாரீர்!**

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

அனைத்துக் கற்கை நெறிகளும் விசேட கட்டணக்கழிவில் **25%**

## Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

## Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

## IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

**Duration: 2 1/2 Months**

## BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

## A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**இச்சலுகை June 15 முன் பதிபவர்களுக்கு மட்டுமே**

| Batch1 | Batch2 | Batch3 | Batch4 |
|---|---|---|---|
| 11-06-2014 @08.00am | 12-06-2014 @08.00am | 13-06-2014 @04.00pm | 14-06-2014 @11.00am |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(C-7613)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.